Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 051 | சனிக்கிழமை | தை 3 ஆம் நாள் 16 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

# கொரோனா உச்சம்;

# கட்டுப்பாடோ தளர்வு!

## தொற்று அபாய வலயங்களில் இருந்து வருவோருக்கு இனி சுயதனிமை இல்லை

யாழ்ப்பாணம், ஜனவரி 16

கொரோனா கொத்தணிகள் புதிது புதிதாக உருவாகி வரும் நிலையில், "கொரோனாத் தொற்று அபாய வலயங்களில் இருந்து வருவோரைச் சுயதனிமைப் படுத்தும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது" என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

19



## இலங்கைக்கு கறுப்புக்கொடி

இராமேஸ்வரம், ஜன.16

தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கை அரசு, அரசுடமையாக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்திலும், கச்சத்தீவு ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறுவதைக் கண்டித்தும் இராமேஸ்வரம் மீனவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி தமது மீன்பிடி படகுக

19

## தரம் 5 புலமைப் பரிசில்: பாடசாலை அனுமதிக்கு வெட்டுப்புள்ளி வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.16

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் பிரபல பாடசாலைகளில் தரம் 6 அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் வெளி

19

## கட்டுநாயக்கவில் பாதுகாப்பு இறுக்கம்

கொழும்பு, ஜன.16

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்காக பயிற்றுவிக்கப்பட்ட 20 மோப்ப நாய்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் உத்தியோகபூர்வமாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டன. பயணப் பொதிகள் எனத் தெரிவித்து

04

## திருமண மண்டபம், சந்தை திங்கள் முதல் வழமைக்கு

### நிபந்தனைகளுடன் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.16

வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றிப் பொதுச் சந்தைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் உரிய இடங்களில் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

19

**வவுனியாவில் 16 பேருக்குத் தொற்று**

விரிவு - 9ஆம் பக்கத்தில்....

## கொரோனா; நால்வர் சாவு

கொழும்பு, ஜன.16

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

19

## வடக்கில் நால்வருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜன.16

வடக்கில் நேற்று 4 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்

19

## உதயன் மீது வழக்கு:

## புதுக்குடியிருப்பு சபை கண்டனத் தீர்மானம்!

முல்லைத்தீவு, ஜன.16

உதயன் பத்திரிகைக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கைக் கண்டித்து, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப்

19

## நினைவேந்தல் உரிமையை பறிப்பது அடக்குமுறையே!

### மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.16

இலங்கையில் சிறுபான்மையின மக்கள் மீதான துன்புறுத்தல்கள் உடன் முடிவுக்கு வர வேண்டும். நினைவேந்தல் உரிமையை வேண்டுமென்றே தட்டிப் பறிப்பதும், இறந்த

04



## இரு மாவட்டங்களில் ஒரே கிராமம்!

### சாந்தபுரத்துக்கு வந்த சோதனை

கிளிநொச்சி, ஜன.16

நில அளவைகளின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள்ளும், நிர்வாக நடவடிக்கைகளில் கிளிநொச்சி மாவட்டத்துக்குள்ளும் சாந்தபுரம் கிராமம் உள்ளடங்குவதால் எதிர்காலத்தில் பிரச்சினைகள் எழலாம். எதிர்காலத்தில் எல்லை மீள்

04

## கால அவகாசம் வழங்கக்கூடாது

### காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்கள் வலியுறுத்து

கிளிநொச்சி, ஜன.16

எந்தவொரு புதிய தீர்மானங்களும்,

19

## நல்லூர் பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்

### கூட்டமைப்பு, முன்னணிக்குள் பிளவு

யாழ்ப்பாணம், ஜன.16

நல்லூர் பிரதேச சபையின் இந்த

04

செல்வா திரையரங்கம்
Online Booking
மாஸ்டர்
தொடர்புகளுக்கு: Viber (வைபர்) 077 149 9094

### மருத்துவமனை, மருத்துவ பீடத்தில் நடத்திய

# 47,683 பி.சி.ஆர். பரிசோதனையில் 644 பேருக்கு கொரோனாத் தொற்றுறுதி



**யாழ்ப்பாணம், ஜன, 16**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் இதுவரை 47 ஆயிரத்து 683 பேருக்கு கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களில் 644 பேருக்கு தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். தனிமைப்படுத்தப்படுபவர்கள் பயப்படத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.**

மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதனா மருத்துவமனையில் இதுவரை 41ஆயிரத்து 248 பேருக்கும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 6ஆயிரத்து 435 பேருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று அபாயம் நிலவிக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் யாழ்.போதனா மருத்துவமனை ஏனைய சிகிச்சைகளையும் உரிய கொரோனாத் தொற்று தடுப்பு நடவடிக்கைகளையும் செயற்படுத்திக்கொண்டு இருக்கின்றது.

ஆகவே நீண்டநாள் வியாதி உடையவர்கள் குறிப்பாக குருதி அழுக்கம், சலரோகம், இருதய நோய் மற்றும் மேலும் பல நோய் உள்ளவர்கள் கிரமமாக அவர்களுக்குரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்தகாலப் பகுதிகளில் அதிக குருதி அமுக்கம் மற்றும் இருதய நோயுடைய ஓரிருவர் உரிய நேரத்தில் முத்துவமனைக்கு வருகை தராமல் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இது தவிர்க்கப்பட வேண்டும்.

**டெங்கு**

டெங்கு நோய்த் தாக்கத்தால் கடந்த வருடம் 866 பேர் சிகிச்சைபெற்று வெளியேறியுள்ளனர். இது 2019 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது குறைவாகவே காணப்படுகின்றது. தற்போது மழைகாலம் என்பதால் டெங்கு பரவக்கூடிய அபாயம் காணப்படுவதால் பொதுமக்கள் விழிர்ப்பாக இருப்பது அவசியம். என தெரிவித்துள்ளார்.

**பயம் வேண்டாம்**

கொரோனாத் தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்படுபவர்கள் தேவையற்ற பயம், பதட்டத்தை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களில் ஆயிரத்து 284 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்று சிகிச்சை நிலையத்தின் பொறுப்பு மருத்துவர் எஸ்.மதன் தெரிவித்தார்.

கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் தொற்றா நோய்கள் கொண்ட

நபர்கள் பிரத்தியேகமாக கவனிக்கப்படுகின்றனர் என்று சிகிச்சை நிலைய மருத்துவர் எஸ்.ரஞ்சன் தெரிவித்தார். (த-20)

---

### இரணைமடுக் குளத்தின்

## 101 ஆவது ஆண்டில் 101 பானையில் பொங்கல்

கிளிநொச்சி, ஜன. 16

இரணைமடு குளத்தின் 101 ஆவது ஆண்டையொட்டி 101 பானைகள் வைத்து பொங்கும் நிகழ்வு கிளிநொச்சி கனகாம்பிகை கோவில் முன்றலில் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது என்று இரணைமடு கமக்கார அமைப்பின் சம்மேளனங்களின் செயலாளர் எஸ்.சிவமோகன் தெரிவித்தார்.

பொங்கல் நிகழ்வுக்கு உரிய அனுமதி பெறப்பட்டுள்ளது. கொவிட் 19 சுகாதார வழிமுறைகளை பின்பற்றி பொங்கல் நிகழ்வு நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-159)

---

## உணவு தவிர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவாக 30 கடைகளும் பூட்டு

கிளிநொச்சி, ஜன. 16

கிளிநொச்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தொழிலாளிகள் இருவர் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நான்கு நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், அவர்களுக்கு ஆதரவாக சங்கத்துக்கு உட்பட்ட 30 கள்ளுக்கடைகளும் பூட்டப்பட்டுள்ளன என்று சக தொழிலாளிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில்

இறுதியாக இருந்த நிர்வாகத்தை இடைநிறுத்தி ஐந்து பேர் கொண்ட நியமன நிர்வாகத்தை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் நியமித்து தொழிலாளர்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது எனத் தெரிவித்ததோடு, கிளிநொச்சி கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தால் நியமித்த, நியமன இயங்குநர் சபையை இரத்துச் செய்யவேண்டும், தொழிலாளர்களின் வாழ்வாதாரம் அவர்களின் குடும்ப நிலைமைகளை கருத்திற்கொண்டு தற்போதுள்ள இயக்குநர் சபையை மீளவும் இயங்க விடுதல், சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலை நடத்தி புதிய இயக்குநர் சபையை உருவாக்குதல் போன்ற மூன்று கோரிக்கைகளை வைத்து அவர்கள் கடந்த 12ஆம் திகதி தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (த-214)

---

## கிளிநொச்சி கொரோனா நிலையத்தில் 154 பேர் சிகிச்சை

கிளிநொச்சி, ஜன. 16

கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் அமைந்துள்ள தொற்று நோய் சிகிச்சை நிலையத்தில் 154 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களில் 96 ஆண்களும், 58பெண்களும் அடங்குவர். அவர்களில் 5 தொடக்கம் 13 வயதுடையவர்கள் இருவரும், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 7 பேரும் அடங்குகின்றனர். ஏனையோர் இடைப்பட்ட வயதுடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைபெற்று குணமாகி 18 பேர் வெளியேறியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த6)

---

## ‘பார்க் அன்ட் றைட்’ பஸ் சேவை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 16

கொழும்பு நகரில் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்ட ‘பார்க் அன்ட் றைட்’ பஸ் சேவையின் முதல் கட்டம் கொட்டாவை, மாகும்புர பன்முக போக்குவரத்து மத்திய நிலையத்தை மையப்படுத்தி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதனை ஆரம்பித்து வைத்தார்.

கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பயணிகளுக்கு வசதியான, பாதுகாப்பான பொதுப் போக்குவரத்து பஸ்சேவையை வழங்குவதன் மூலம் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்கு பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைப்பதே இதன் நோக்கம். இது சூழல் மாசடைதல், கால விரயம் மற்றும் பயணிகளின் மன அழுத்தத்தை குறைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளை ஏற்றிச் செல்ல சொகுசு பஸ்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. கட்டணம் சாதாரண பஸ் கட்டணத்தை விட இருமடங்காகும். குறிப்பிட்ட பஸ் நிலையங்களில் குறைந்த எண்ணிக்கையிலான பயணிகள், குறுகிய நேரத்தில் குறித்த இடத்தை சென்றடைதல், மரியாதையான, நட்பு மற்றும் கவர்ச்சிகரமான போக்குவரத்தை வழங்குதல் ஆகியவை இந்த திட்டத்தில் அடங்கும்.

வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்து போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு மற்றும் இலங்கை போக்குவரத்து சபை இணைந்து பொதுப் போக்குவரத்து சேவையை நடைமுறைப்படுத்துகின்றன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (த)

---

## அரச அலுவலகங்களில் தைப்பொங்கல் நேற்று



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் தைப்பொங்கல்

தென்மராட்சிப்பிரதேசத்தில் அரச அலுவலகங்களில் தைப் பொங்கல் நிகழ்வு நேற்று நடைபெற்றது. பிரதேச செயலகம், சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், சமுர்த்தி வங்கிகள், மற்றும் பல திணைக்களங்களில் நேற்று தைப்பொங்கல் நிகழ்வு நடைபெற்றது. பொங்கல் படைத்த பின்னர் தேவைநாடிவந்த பொதுமக்களுக்கும் பொங்கல் பரிமாறப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

---

## மஞ்சள் தூள் என்றுகூறி ‘காவி’யை விற்ற பிரகிருதி

### சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி, ஜன. 16

மஞ்சளுக்குத் தட்டுப்பாடு காரணமாக அதன் விலை அதிகரித்துள்ள நிலையில், சாவகச்சேரியில் சுவருக்குப் பூசும் ‘காவி’யை பொதிசெய்து மஞ்சள் தூள் என்றுகூறி விற்பனை செய்துள்ளார் ஒருவர். தைப்பொங்கல் தினத்தன்று அதைப் பயன்பாட்டுக்கு எடுத்தபோதே அது மஞ்சள் தூள் அல்ல, காவி என்பது தெரிய வந்தது.

அதனால், ஏமாற்றமும் கோபமும் அடைந்த பொதுமக்கள் சிலர், அதை விற்பனை செய்தவரை சாவகச்சேரியில் தேடினர் என்றும் எனினும், அவர் சிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொங்கல் தினத்தன்று மஞ்சள் தூள் பைக்கற்றுக்களை தண்ணீரில் போட்டபோதே அது மஞ்சள் தூள் அல்ல காவி என்பது தெரிய வந்தது. இதனால் அவற்றை விற்ற நபரை நேற்று சந்தையில் சிலர் தேடித்திரிந்தனர்.

மஞ்சள் கிலோ 5 ஆயிரம் ரூபா தொடக்கம் வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்தநிலையில் சாவகச்சேரி சந்தைப் பகுதியில் நடைபாதை வியாபாரியாக அவற்றை விற்பனை செய்த நபர், 10 கிராம் மஞ்சள் தூள் 20 ரூபா என்றுகூறி விற்பனை செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. மஞ்சள் காவி கிலோ 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (த-9)

# தொழிற்சாலை ஒன்றில் 55 பேருக்கு கொரோனா

**கொழும்பு,ஜன.16**

**மீகொடயிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 55 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று ஹோமாகம சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.**

26 ஊழியர்களுக்கு நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 7 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதன்பின்னர் , மீதமுள்ள ஊழியர்களுக்கும் பி.சி.ஆர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் 48 பேருக்கு தொற்று உறுதி செய்யபட்டுள்ளது.

இதனையடுத்து தொற்றுக்குள்ளான ஊழியர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதுடன், தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர். (ஐஇ)

## செங்குந்தா இந்துவுக்கு தேவை தகுதி வாய்ந்த அதிபரே

*பழைய மாணவர் சங்கம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்ப்பாணம் செங்குந்த இந்துக்கல்லூரிக்கு தகுதி வாய்ந்த, மிகப் பொருத்தமான அதிபரை நியமிக்க வேண்டும் என்று அந்தப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான கோரிக்கைக் கடிதங்கள் வடக்கு பிரதம செயலர், கல்வி அமைச்சின் செயலர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

கடந்த காலங்களில் சில வேண்டத்தகாத செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்ட இப்பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 1 அல்லாத அதிபர்களின் பொருத்தமற்ற நிர்வாக நடவடிக்கைகளால் காலத்துக்குக் காலம் கல்லூரியின் தனிச் சிறப்புக்கள், கல்வி, பண்பாடு, கலாச்சாரம், விளையாட்டு ,பௌதீகவளம், நன்மதிப்பு போன்ற விழுமியங்கள் சீர் குலைந்தும் பின்னகர்ந்தும் போவதால் ஏற்படும் முரண்பாடுகள் காரணமாக கல்லூரியானது இழி நிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றது. எனவே கடந்த 10 ஆம் திகதி முதல் எமது கல்லூரியிலிருந்து மாற்றலாகிச் சென்ற அதிபருக்குப் பதிலாக கல்வி நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமைய உரிய சட்டப் பிரகாரம் பொருத்தமான கால அவகாசத்தில் தகுதிவாய்ந்த, இப்பிரதேசத்தை எவ்வகையிலும் சாராத, தரம் 1ஐச் சேர்ந்த அதிபர் ஒருவரை பகிரங்கமாக விண்ணப்பம் கோரி நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்து நியமிப்பதன் மூலம் எவ்வித பக்கச் சார்பற்ற சுயாதீனமான செயற்பாடுகளால் மேம்பட்ட திசை நோக்கி எமது கல்லூரியை மீளவும் நன்னிலைக்கு இட்டுச் செல்லும் வகையிலான சீரிய நிர்வாகத்துக்கு வழியமைக்கவேண்டும் என்றுள்ளது. (ஐ)

## ஜோன்ஸ்டனுக்கு எதிராக வழக்கு சட்டத்துக்கு முரணானது

*கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு*

கொழும்பு, ஜன.16

அரசுக்கு நான்கரைக் கோடி ரூபாவை நட்டம் ஏற்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோக்கு எதிராக லஞ்ச ஆணைக் குழுவால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானது என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன தீர்ப்பளித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை வர்த்தக அமைச்சராக கடமையாற்றிய போது, சதொச நிறுவனத்தின் 153 ஊழியர்களை நீக்கி அவர்களை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தியமையின் ஊடாக, அரசுக்கு நான்கரைக் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டது என்று தெரிவித்து முன்னைய அரச காலப் பகுதியில் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் அமைச்சர் ஜோன்ஸ்டனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானது எனத் தெரிவித்து அமைச்சர் ஜோஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் கேட்டுக்கொண்டனர். இருப்பினும் குறித்த அடிப்படை எதிர்ப்பு மனுக்களை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்திருந்தது. இதற்கு எதிராக அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எதிர்ப்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தார். அவரின் எதிர்ப்பு மனுவை விசாரித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு சட்டத்துக்கு முரணானது என தீர்ப்பளித்தார். (ப)

**ஈஸ்டர் தாக்குல்;**

## 32 பேருக்கு எதிராக வழக்குத் தொடர முடிவு

கொழும்பு, ஜன.16

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய 32 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். பொலிஸ் விசாரணைகள் நிறைவு பெற்ற 8 ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும், சுமார் 241 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## சிறைச்சாலை கொத்தணி 4,282 ஆக உயர்வடைவு

கொழும்பு, ஜன.16

சிறைச்சாலை கொத்தணியில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 282 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்றாளர்கள் 8 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டனர். இதில் இரு கைதிகள் மற்றும் இரு சிறைச்சாலை உயர் அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்தே தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

மேலும் சிறைச்சாலை கொத்தணியில் குணமடைந்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 868 ஆக காணப்படுகின்றது. (ஐஇ)

## கண்காட்சியும் பொங்கல் விழாவும்

எழுதிரள் முற்றத்தில் கடந்த ஒருவார காலமாக நடத்தப்பட்ட இயற்கை விவசாய வாரத்தின் நிறைவுநாள் நிகழ்வுகள் தைப்பொங்கல் தினமான நேற்று முன்தினம் எழுதிரள் முற்றத்தில் இடம்பெற்றது.

இதில் இடம்பெற்ற “ஏரோவியம்” ஓவியக் கண்காட்சியை. இம்மாத இறுதிவரை 209, பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள ‘எழுதிரள்’ மையத்தில் பார்வையிடலாம். என்றும், மேலதிக விபரங்களுக்கு 021 222 5520 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை மேற்கொள்ளலாம். என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கிய 7,727 பேரையும் மீள இணைக்கவும்

*தேர்தல் ஆணைக்குழுவுக்கு ரிஷாட் எம்.பி கடிதம்*

மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து, புத்தளம் மாவட்டத்தில் வாழ்ந்து வந்தவர்கள், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், கொத்தணி வாக்களிப்பு முறை ஊடாக, தமது மாவட்டத்தில் வாக்களிப்பதற்குத் தேர்தல் ஆணைக்குழு சந்தர்ப்பம் வழங்கியிருந்தது. எனினும், அவர்களில் 7ஆயிரத்து 727 பேரின் வாக்காளர் பதிவை, மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளரும், அதிகாரிகளும் சேர்ந்து திட்டமிட்டு, வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கியுள்ளனர். எனவே, அவர்களது வாக்குகளை மீள அந்தந்தக் கிராமங்களில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளார். இந்த வாக்காளர்கள் மீள்குடியேற்றத்துக்காக சொந்த மண்ணுக்குச் சென்று, தமது பூர்வீக பிரதேசங்களில் தங்களுக்கான கொட்டில்களையோ அல்லது தற்காலிக இருப்பிடங்களையோ அமைத்த பிறகு, அங்கு கல்வி,சுகாதார, வர்த்தக நடவடிக்கைகளில் குறைபாடு இருந்ததால் அல்லது இருப்பதற்கு ஒழுங்கான வீடுகள் இல்லாத காரணத்தால், மீள்குடியேறிய இடங்களிலிருந்து தற்காலிகமாக மீண்டும் புத்தளத்துக்கு வந்திருக்கின்றனர். இவர்கள், மீள்குடியேறிய பிரதேசங்களில் உரிய வசதிகள் கிடைத்தவுடன் மீண்டும் அங்கு செல்வதற்கு விருப்பத்துடன் இருக்கின்றனர். அவர்களின் வாக்குப் பதிவுகளை பலவந்தமாக நீக்கியமை மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறலாகும். இவ்வாறு வாக்காளர் பதிவு நீக்கப்பட்டவர்களுக்கு இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் தற்பொழுது வாக்குகள் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. கொழும்பில் வசிக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ச மெதமுலானையில் வாக்களிக்கிறார். முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அத்தனகல்ல மற்றும் பொலநறுவையிலேயே வாக்களிக்கின்றனர் என்று எந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த56)

## அறநெறிப் பாடசாலைகளை நாளை தொடக்கம் இயக்கவும்

*இந்து கலாசார திணைக்களம் அறிவிப்பு*

சாவகச்சேரி, ஜன. 16

கொரோனாத் தொற்றுக் காரணமாக மூடப்பட்ட அறநெறிப் பாடசாலைகள் அனைத்தும் நாளை மாறும் திங்கட்கிழமை தொடக்கம் இயங்க வேண்டும் என்று இந்து கலாசாரத் திணைக்களம் பிரதேச செயலகங்களுக்கு அறிவித்துள்ளது. கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. இந்தநிலையில், அறநெறிப் பாடசாலைகளை இயக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (த9)

English Classes
Gr-1 to O/L
Grammar With Syllabus
வீடு வந்து கற்பிக்கப்படும்.
077 331 4608

## ரூ. 826 கோடி வழங்கியது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஜன.16

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு 826 கோடி ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் நீதித்துறை, உணவு பராமரிப்பு மேம்படுத்தல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் ஏற்படும் நிலைமைகளை கட்டுப்படுத்தல் செயற்திட்டங்களுக்காகவே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைத்திட்டங்கள் தொடர்பில் 3 உடன்படிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையுடன் கைச்சாத்திட்டுள்ளது. இதன்படி, நாட்டின் நீதித்துறையை பலப்படுத்தும் வேலைத்திட்டத்துக்காக 416 கோடி ரூபாவும் உணவு பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தல் திட்டத்துக்காக 231 கோடி ரூபாவும், நாட்டில் கைத்தொழில் துறையில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கும் நடவடிக்கைகளுக்காக 179 கோடி ரூபாவும், வழங்கப்பட்டுள்ளது. (வ-இ)

# சுகாதார முறைகளுடன் நாட்டினுள் சுற்றுலாவிகள்



### கமால் குணரத்ன விடாப்பிடி

**கொழும்பு, ஜன.16**

**சுகாதார வழிமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டு வெளிநாடுகளிலிருந்து சுற்றுலாப்பயணிகளை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.**

நாட்டில் சுற்றுலாத்துறை தொழில்துறையை நம்பி 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன.

அவர்கள் கொரோனா பரவலால் பாதிக்கப்பட்டு அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அதனைக் கருத்திற் கொண்டே அரசு சுற்றுலாப் பயணிகளை அழைத்துவர நடவடிக்கைகளை எடுத்தது.

அதன் முதற்கட்டமாகவே உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதில் சிறு குறைபாடுகள் இடம்பெற்றுள்ளன என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வதோடு எதிர் காலத்தில் அந்தக் குறைபாடுகள் இடம்பெறாதவகையில் தொடர்ந்தும் சுற்றுலாப்பயணிகளை அழைத்துவரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்ப டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## பெண்ணின் சடல அடக்கம்: அறிக்கை கோரும் பொலிஸ்

கொழும்பு, ஜன.16

மினுவாங்கொடை, கல்லொழுவ பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராம சேவை அதிகாரிக்கு அறிவிக்காது அந்தப் பிரதேசத்தில் மரணித்த பெண் ஒருவரின் சடலத்தை அடக்கம் செய்திருப்பது தொடர்பில், மினுவாங்கொடை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மரணித்த பெண் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தாரா? அல்லது கொரோனாத் தொற்றுக்குள்ளான ஒருவருடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்தாரா? என்பது தொடர்பிலான அறிக்கையொன்றை குடும்பத்தவர் மூலமாகப் பெற்றுத்தருமாறு, பொலிஸாரால் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-இ)

## மோ.சைக்கிள் பந்தயம்: 12 சாரதிகள் கைது!

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தை மீறி பிலியந்தலை பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் பங்கெடுத்தமைக்காக 12 மோட்டார் சைக்கிள் சாரதிகளைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ற-இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### நல்லூர்...

ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 13 உறுப்பினர்களும், எதிராக 2 உறுப்பினர்களும் வாக்களித்தனர். அதனால் 11 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேறியது.

வரவு செலவுத் திட்டம் தவிசாளர் ப.மயூரனால் நேற்று சபையில் முன்வை க்கப்பட்டது.

20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில், வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 13 உறுப்பினர்களும், எதிராக இரண்டு உறுப்பினர்களும் வாக்களிக்க, மூன்று உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். முன்னாள் தவிசாளர் உட்பட இரண்டு உறுப்பினர்கள் அமர்பில் கலந்துகொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான இலங்கை தமிழ் அரசுக் கட்சியியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் நடுநிலை வகிக்க, ரெலோவைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூன்று உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்க, இரண்டு உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் சுயேச்சை குழு உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன்மூலம் சபையின் வரவு செலவுத் திட்டம் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த நல்லூர் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்னாள் தவிசாளர் த.தியாகமூர்த்தியால் இரண்டு தடவைகள் சமர்ப்பிக்கப்பட்டு தோல்வியடைந்த நிலையில் அவர் தனது பதவியை இழந்திருந்தார்.

அதனால் சபையின் புதிய தவிசாளரை தெரிவு செய்யும் கூட்டம் கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்றபோது புதிய தவிசாளராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ப.மயூரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்பட்ட மதுசுதனை தோற்கடித்து தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ20)

### கட்டுநாயக்கவில்...

பயணிகளால் இரகசியமான முறையில் கொண்டு செல்லப்படக் கூடிய வெடிபொருள்கள் மற்றும் போதைப் பொருள்கள் என்பவற்றை இனங்காண்பதற்காக இந்த நாய்களுக்கு அஸ்கிரியவிலுள்ள இலங்கை பொலிஸ் பயிற்சி பாடசாலையில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இதற்காக 22 மில்லியன் ரூபா நிதியை இலங்கை விமான சேவை அதிகாரசபை வழங்கியுள்ளது. (ஒ.இ)

### இரு மாவட்டங்களில்...

நிர்ணய குழுவுடன் ஆராய்ந்து, சாந்தபுரம் கிராமத்தை கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளால் சாந்தபுரம் கிராமத்தின் பல பகுதிகள் கடந்த வாரத்தில் ஒளிப்படம் எடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பணியாளர்கள் காணி ஆவணங்களை வழங்குவதற்காக சாந்தபுரம் கிராமத்தின் பொது நோக்கு மண்டபத்துக்கு நேற்றுச் சென்றுள்ளனர். மக்களையும் அழைத்துள்ளனர். அப்போது மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

'இன்றுவரை அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் கரைச்சிப் பிரதேச செயலகத்தையும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தையுமே அணுகி வருகின்றோம். முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குள் எமது கிராமத்தை உள்ளடக்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது' என்று அந்த மக்கள் தெரிவித்தனர்.

'நில அளவை வரைபடத்தின்படி சாந்தபுரம் கிராமம் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் வருகின்றது. மக்கள் நிர்வாக நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்டத்துடன் பேணி வருகின்றார்கள். காணி ஆவணங்களை மாத்திரமே நாம் வழங்குகின்றோம். ஏனைய நடவடிக்கைகள் வழமைபோன்று கிளிநொச்சி மாவட்டத்துடனேயே இருக்கும்' என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

'சாந்தபுரம் கிராமம் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்குள் வருகின்றமையால் காணி ஆவணங்களை மாத்திரமே முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய நடவடிக்கைள் தொடர்ந்தும் கிளிநொச்சி மாவட்டத்துடன் இருக்கும். ஆனாலும் இது நிர்வாக நடவடிக்கைகளில் குழப்பத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்தலாம். எதிர்காலத்தில் எல்லை மீள் நிர்ணய குழுவுடன் பேசி முழுமையாக சாந்தபுரத்தை கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

(எ-ஒ,6,214)

### நினைவேந்தல்...

உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு அனுமதி மறுப்பதும் அடக்குமுறையின் உச்சக்கட்டத்தையே எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இறுதிப் போரில் உயிரிழந்த பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் அவர்களின் உறவுகள் நினைவாக யாழ். பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் தூபி இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரில் இறந்த தமது குடும்பத்தினரை உறவினர்களை நினைவுகூரத் தமிழ் மக்களுக்கும் உரிமை உண்டு. அதை எந்தச் சட்டங்கள் ஊடாகவும் தடுத்து நிறுத்த முடியாது. நினைவுத் தூபிகளை உடைப்பதும் அழிப்பதும் இறந்த ஆன்மாக்களைக் கொச்சைப்படுத்தும் செயலாகும்.

இறந்த உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். கொரோனாவால் உயிரிழந்த அனைவரையும் தகனம் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் எந்தச் சட்டத்திலும் இல்லை.

இலங்கையில் சிறுபான்மையின மக்கள் மீதான துன்புறுத்தல்கள் உடன் முடிவுக்கு வர வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் அழுத்திக்கூற விரும்புகின்றேன்என்றார். (எ-22)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மனித உரிமைகளை மறுதலிக்கும் இலங்கை!

"சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி" என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதாவது சாதாரணமாக தன்பாட்டுக்கு இருக்கும் ஒரு விடயத்தை, சர்ச்சைக்கும் சங்கடத்துக்கும் உரிய விடயமாக மாற்றி, பொறிக்குள் தங்களைத் தாங்களே சிக்கவைத்துக்கொள்ளும் செயற்பாட்டையே அவ்வாறு சொல்வர். இவ்வாறு தொலைநோக்குச் சிந்தனையற்ற செயற்பாடுகளை மேற்கொள்வதில் தம்மை மிஞ்ச யாருமில்லை என்பதை, சிங்களப் பேரினவாதிகளும், அவர்களுக்கு 'ஜால்ரா' போட்டு பிழைப்பு நடத்தும் தமிழர் தரப்பினரும் அடிக்கடி நிரூபித்தே வருகின்றனர்.

அவர்களின் அண்மைக்கால நடவடிக்கையான யாழ். பல்கலைக் கழக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிப்பு சம்பவம் இன்று கடும் கண்டனத்துக்கும், விமர்சனத்துக்குமுரிய பேசு, பொருளாகி விட்டுள்ளது. இது வெகுவிரைவில் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள், தொடர்பான அமர்வில் இலங்கை அரசை ஒரு சிக்கலான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளியிருப்பதாகவே எண்ணலாம். அத்தோடு தூபி இடிப்பு அரசுக்கு மேலும் தலைவலியைக் கொடுக்கும் விடயமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலமாக இலங்கையில் அரசு தரப்பினரால் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு மாற்றங்களும் நகர்வுகளும் இலங்கையின் ஜனநாயகத்தன்மையை கேலிக்கும் கேள்விக்கும் உரிய தாக்கி வருகின்றன. இந்த நிலையில், மனித உரிமைகள் தொடர்பான விடயங்களும் சந்தேகத்துக்குரியனவாக அதற்குப் பொறுப்பான சர்வதேச அமைப்புகளால் தீவிரமாக அவதானிக்கப் பட்டு வருகிறது. இந்த நடவடிக்கையானது கோத்தாபய அரசு தொடர்பான எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் சர்வதேச சமூகம் கை கழுவி விடும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என ஆய்வு வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இதுதொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள 2021ஆம் ஆண்டுக்கான சர்வதேச அறிக்கையில் இலங்கை தொடர்பாகக் காட்டமாகச் சில விடயங்களைத் தெரிவித்துள்ளது.

"புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர் இலங்கை மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் அச்சுறுத்தப்பட்டும், துன்புறுத்தல்களுக்கு ஆளாகியும் வருவதுடன், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள் மீதான கண்காணிப்புகளும், அழுத்தங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அரச படைகளினாலேயே இந்த நெருக்கடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தமிழ் - முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கான அச்சுறுத்தல்களும் அவர்கள் மீதான அரசின் பாகுபாடுகளும் அதிகரித்துவருகின்றன. நீதித்துறையின் சுயாதீனமான செயற்பாடுகளும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளை மேற்பார்வை செய்யும் அமைப்புக்களின் மீதான கண்காணிப்புகள் அவற்றின் செயற்பாடுகளை பலவீனமடையச் செய்துள்ள அதேவேளை, அரசமைப்பில் சீர்திருத்தமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது" என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.


இதேவேளை இலங்கையில் நடைபெற்ற யுத்தம் தொடர்பான உண்மைகளைத் தேடும் வகையிலான பொறுப்புக் கூறல் நிலையினின்றும் அரசு விலகிக்கொள்வதாக அறிவித்ததுடன், அது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அளித்த வாக்குறுதியையும் திருப்பப் பெற்றுள்ளமை தொடர்பாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்கள் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர் எனவும், கருத்துக்களையும், விமர்சனங்களையும், வெளிப்படையாகக் கூற அவர்கள் அஞ்சுகின்றனர் எனவும் மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் தென்னாசியாவுக்கான இயக்குநர் மீனாட்சி கங்குலி பதிவிட்டுள்ளார்.

எல்லாவற்றையும் விடப் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்படும் இராணுவ உயர் அதிகாரிகளைச் சிவில் நிர்வாகம் கடமைப் பொறுப்புகளில் அமர்த்தி இருப்பது குறித்தும் அதில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போன்ற நடவடிக்கைக்கள் மூலம் மீண்டும் மோசமானதும் அச்சுறுத்தல் மிக்க சூழ்நிலைநிலைக்கும் இலங்கை திருப்புகின்றது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை ஒரு பொய்யான குற்றச்சாட்டுக்களாகவே தாம் கணக்கிடுகிறோம் என அரசு தரப்பு மறுதலிக்கலாம். ஏனெனில் அவ்வாறான ஒரு மறுதலிப்பு நிலைப்பாட்டையே ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் அரசு முன்வைக்கத் தீவிரம் காட்டுவதாகவும் தெரிகிறது. ஆனால் வெறுமனே மறுதலிப்புகள் உண்மையாகாது என்பதை அரச தரப்பு புரிந்துகொள்ளவேண்டும். நியாயம் வேண்டிப் போராடி நிற்போர் ஒருமைப்பட்டு உறுதியாக நின்றால் பொய்களை வெல்ல வைக்கும் தந்திரோபாயத்தினைத் தோல்வியடையச் செய்யலாம். ஏழை சொல் அம்பலமேறும் என்ற வார்த்தையையும் அர்த்தப்படுத்தலாம்.

## இன்றைய கேலிச்சித்திரம்



நன்றி - அவந்த ஆட்டிகல

# உக்ரேனிய கொரோனா அலை நாட்டில் ஏற்பட வாய்ப்பில்லை

### சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.16**

**உக்ரேனிய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதால் உக்ரேனிய கொரோனா அலை ஏற்படும் என்ற தவறான அச்சம் எதிர்க்கட்சியினரிடையே இருந்தபோதிலும், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றும் அரசு உக்ரேனிய கொரோனா அலை நாட்டில் இல்லை என்பதை உறுதி செய்துள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பைலட் திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் ஆயிரத்து 200 உக்ரேனிய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். ஆனால் அவர்களில் இருவர் மட்டுமே கொவிட் 19ஆல் பாதிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஜனவரி 21ஆம் திகதி முதல் நாட்டை உத்தியோகபூர்வமாக சுற்றுலாப் பயணிகளுக்கு திறக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டைத் திறக்க பைலட் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகள் சரிசெய்யப்பட்டுள்ளன. சுற்றுலாத் துறையின் வீழ்ச்சியால் நாட்டில் 3 மில்லியன் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ப)



சுற்றுலாவிகளுக்கு

# "இலங்கைச் சுற்றுலா" புதிய அப்ஸ் அறிமுகம்

கொழும்பு, ஜன.16

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக "இலங்கைச் சுற்றுலா" என்ற தொலைபேசி அப்ஸ் ஒன்று இம் மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. சுற்றுலாப் பயணங்களுக்கான விசாக்களைப் பெறும்போது சுற்றுலாப் பயணிகள் இந்த அப்ஸ்ஸின் மூலம் காப்பீடு செய்வதனைக் கட்டாயமாக்கவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை முடிவு செய்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரும் போது, பின்பற்ற வேண்டிய பி.சி.ஆர். சோதனைக் கட்டணம் மற்றும் சுகாதார விதிமுறைகள் பற்றிய தகவல்களும் இந்த அப்ஸ்ஸில் உள்ளடக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலஞ்சக் குற்றச்சாட்டில் இரு பொலிஸார் கைது

கொழும்பு, ஜன. 16

இலஞ்சக் குற்றச்சாட்டில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எல்பிட்டிய, மாத்தறை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் இவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இலஞ்சம் மற்றும் ஊழலுடன் தொடர்புபடும் பொலிஸ் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் திணைக்களம் தயங்காது என பொலிஸ் பேச்சாளர் எச்சரித்தார். (ரி5)

# சுகாதார நடைமுறைகளை சரிவர பின்பற்றத் தவறிய தொற்றாளர்கள்

*மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு*



**மன்னார்,ஜன.16**

**மன்னார் மாவட்டத்தில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் அனைவரும் சுகாதார நடை முறைகளை சரியான முறையில் பின்பற்றத் தவறியதன் காரணத்தினாலேயே தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை தெரிய வந்துள்ளது என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டத்தில் மேலும் 5 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 3 நபர்கள் மன்னார் பஸார் பகுதியில் உள்ள பிரபலமான உணவகம் ஒன்றில் பணியாற்றுபவர்கள்.

நான்காவது தொற்றாளர் பஸ் நிலையப் பகுதியில் அமைந்துள்ள புடவை விற்பனை நிலையமொன்றின் உரிமையாளர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவருடைய விற்பனை நிலையத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

5 ஆவது நபராக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் கொரோனாத் தொற்றுள்ள நோயாளர் ஒருவரை கவனிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையிலே குறித்த உத்தியோகத்தருக்கு நோய் தொற்றி இருக்கலாம் என்று நம்புகின்றோம்.

மன்னார் மாவட்டத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் தற்போது வரை 21 நபர்கள் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் கலந்து உரையாடியதன் பிரகாரம் அவர்களுக்கு தொற்றானது சாதாரண நிலைமையில் ஏற்படவில்லை.

அவர்கள் சுகாதார நடைமுறைகளை சரியான முறையில் பின்பற்றத் தவறியதன் காரணத்தால் தொற்று ஏற்பட்டுள்ளதை எம்மால் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே பொது மக்கள் அடிப்படையான சுகாதார நடைமுறைகளை கடைப் பிடிப்பதன் ஊடாக தொற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் -என்றார். (ஜ-56)

## நீர் வழங்கல் தடைப்படும்

வவுனியா,ஜன.16

வவுனியா நகரை அண்டிய பிரதேசங்களில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை நீர் வழங்கல் செயற்பாடு தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீரிணைப்புக் குழாய்களில் திருத்தப் பணிகள் இடம்பெறவுள்ளமையால் குறித்த பகுதியில் நீர் வழங்கல் செயற்பாடு தடைப்படும் என்று நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

வவுனியா நகரம், குருமன்காடு, சூசைப்பிள்ளையார் வீதி, மற்றும் வைரவப்புளியங்குளம் பகுதிகளிலேயே நீர் வழங்கல் செயற்பாடுகள் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-110)

## போட்டிப் பரீட்சைகள் பிற்போடல்

யாழ்ப்பாணம்,ஜன.16

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்படவிருந்த ஆள்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் அனைத்தும் கொரோனாத் தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண பொதுச் சேவையின் விவசாய போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமையும், வடக்கு மாகாண பொதுச் சேவையின் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் பயிற்சி தரம் மற்றும் வடக்கு மாகாண பொதுச் சேவையின் படவரைஞர் பயிற்சி தரம் ஆகிய பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதியும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் நிலை காரணமாக மேற்குறிப்பிட்ட அனைத்துப் பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன. இப் பரீட்சைகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார். (ஐ)


## 71 பேருக்கு எழுமாறான பி.சி.ஆர் பரிசோதனை

சாவகச்சேரி, ஜன. 16

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று அத்தியாவசிய உணவுப் பொதிகளுடன் வந்த வாகனங்களின் சாரதிகள், அவர்களின் உதவியாளர்கள் மற்றும் மந்துவில் பகுதியில் தனிமைப்படுத்தலில் உள்ள கொரோனாத் தொற்றாளரின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோருக்கு, எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டனர்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் 71 பேருக்கும், மந்துவிலில் 13 பேருக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பெறப்பட்ட 84 மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டன. (ப-9)

## பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் கையளிப்பு



யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரில் கல்வி கற்கும் புத்தூர், வாதரவத்தை, அச்செழு, நீர்வேலி, சிறுப்பிட்டி மற்றும் அராலி பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

மக்கள் நல்வாழ்வு மையம் மற்றும் ஆவரங்கால் ஒன்றியம், ஜீவ ஊற்று அன்பின் கரம், கமலா அறக்கட்டளை ஆகிய நிறுவனங்கள் இணைந்து " பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள்" எனும் திட்டத்தின் கீழ் இந்த உதவிகளை வழங்கின. (ஜ-222)



## பார்வையாளர் அரங்கு அரியாலையில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ்ப்பாணம் அரியாலை காந்தி சனசமூக நிலையத்தின் 'பார்வையாளர் அரங்கு" நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

நிகழ்வில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் திருமதி. நளினா பிறேமலாலின் 2019-2020 ஆம் ஆண்டுக்கான வட்டார நிதி ஒதுக்கீட்டில் இந்த அரங்கு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-ரி2)

## வெள்ளத்தால் பயிர்கள் அழிவு

*மக்கள் விசனம்*

சாவகச்சேரி ஜன.16

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நுணாவில் மத்தி கிராம அலுவலர் பிரிவின் பெரும் பகுதிகளில் மழைநீர் கடந்த ஒன்றரை மாதமாக தேங்கி நிற்கிறது.

குறித்த பகுதியில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் மற்றும் விவசாயப் பயிர்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளன.

மேலும், இப்பகுதிகளில் வசித்த 15 குடும்பங்கள் தமது வசிப்பிடங்களுக்குச் செல்ல முடியாமல் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். சீரற்ற காலநிலையால் குடியிருப்பாளர்களும், விவசாயப் பயிர்களும் பாதிக்கப்பட்டபோதும் இதுவரை எந்தவொரு அதிகாரிகளும் வந்து பார்வையிடவில்லை என மக்கள் தெரிவித்தனர். (ரி5-9)

## மாணிக்கதாசன் நற்பணிமன்றம் வவுனியாவில் அங்குரார்ப்பணம்

புளொட் அமைப்பின் மூத்த உறுப்பினர் மறைந்த மாணிக்கதாசனின் பிறந்த நாளை முன்னிட்டு வவுனியா புகையிரத நிலைய வீதியில் "மாணிக்கதாசன் நற்பணி மன்றம்" ஒன்று நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கல்வியைத் தொடர முடியாமல் சிரமப்படும் மாணவர்களை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு உதவும் முகமாக இந்த நற்பணி மன்றம் ஆரம்பிக்கப்பட்டது என்று மன்றத்தின் ஆலோசகரும், கவிஞருமான மாணிக்கம் ஜெகன் தெரிவித்தார்.

நிகழ்வில் புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினர்களான எஸ்.யோகராஜா (யோகண்ணன்), பழனிமுத்து சிவராஜா (சிவா) ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (ஜ-110)

## இலஞ்சம் பெற்ற அதிகாரிக்கு 10 ஆண்டுகள் கடூழியச்சிறை

கொழும்பு,ஜன.16

30 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றத்துக்காக, நொச்சியாகம, ரனோராவ கமநல சேவைகள் அபிவிருத்தி மையத்தின் முன்னாள் கமநல சேவை அபிவிருத்தி பிரதேச அதிகாரி ஒருவருக்கு, 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்யா பட்ட பெதிகேவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரிக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டதுடன், அதைச் செலுத்தத் தவறினால் மேலும் 2 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலஞ்சமாகப் பெற்றுக்கொண்ட 30 ஆயிரத்தையும் அரசுக்குச் செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத் தவறினால் மேலும் ஒரு வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (க-இ)

# கொரோனாவுக்குப் பயந்து மருத்துவர்கள் ஓடி ஒளியார்

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

**கொழும்பு,ஜன.16**

**மருத்துவர்கள் கொரோனாத் தொற்றுக்குப் பயந்து ஓடவும் இல்லை, ஒளியவும் இல்லை என்று இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனிய பங்கேற்ற விருந்தில், மருத்துவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது.

இதனையடுத்து மருத்துவர் பாதெனிய தலைமறைவாகியுள்ளார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் விளக்கமொன்றைத் தருவதற்காக, இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெறுகின்ற மருத்துவ விடுதிகளில் தொற்றுப் பரவுவதென்பது யதார்த்தம். மருத்துவர்களோ அல்லது வேறு தரப்பினரோ ஒன்றாக, குழுவாக அமர்ந்து உணவருந்துவது என்பது தற்காலத்தில் தகுதியற்ற செயற்பாடு. எவ்வாறாயினும் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்வதற்கு சங்கத்துக்குத் தைரியம் உள்ளது. தைரியமாகத் தொற்றைக் கட்டுப்படுத்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்நின்று உழைக்கின்றது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)



கொழும்பில் இயங்கும் நற்குண அமைப்பால், மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. 448 மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க-159)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

சங்கானை, ஜன.16

சங்கானை பிரதேச இளைஞர் கழகச் சம்மேளனப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

எனவே பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், அமைப்பாளர், உபதலைவர் மற்றும் உபசெயலாளர்கள் ஆகியோரை தவறாது, சுகாதார முறைப்படி கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப)

## சுகாதாரச் சீர்கேடுகளுடன் நானாட்டானில் மீன் வியாபாரம்

### தவிசாளர் குற்றச்சாட்டு

மன்னார், ஜன.16

மன்னார், நானாட்டானில் சுகாதாரச் சீர்கேடான முறையில் மீன் வியாபாரம் இடம்பெறுவது தொடர்பில் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை என்று நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நானாட்டான் பிரதேச சபையின் நானாட்டான் பேருந்து நிலையத்தில் வெளிக் கிராமப் புறங்களிலிருந்து சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்து மீன் வியாபாரம் செய்வோர் சுகாதாரத்துக்கு சீர்கேடான முறையில் வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதனைத் தடைசெய்து நானாட்டானில் இதற்கு என அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தையில் வியாபாரத்தை மேற்கொள்ளும்படி இவர்களுக்கு பல முறை அறிவுறுத்தல் வழங்கியும் இவர்கள் அதற்கு மதிப்பளிக்காது செயல்பட்டு வருகின்றனர்.

இவற்றைத் தடைசெய்யக்கோரி பல முறை முருங்கன் பொலிஸார், மற்றும் சுகாதார சேவை அதிகாரிகளது கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நிலையில், அவ்வாறு வியாபாரம் செய்பவர்களின் தராசுகளை நானாட்டான் பிரதேச சபையினர் கைப்பற்றி, வியாபாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்ததுடன் பின்னர் அவர்களின் தராசுகள் திருப்பி வழங்கப்பட்டுள்ளன - என்றார். (ப-50)

## அத்தியாவசிய பொருள்கள் வழங்கல்

சாவகச்சேரி, ஜன.16

சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நடைபெற்ற போது கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சங்கத்தின் முன்னாள் உதவிச் செயலாளர் திருமதி சாந்த சொரூபி சற்குணநாதனின் ஏழாவது ஆண்டு நினைவையொட்டி அவரின் குடும்பத்தினரால் அந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ப-9)

## கூட்டமைப்பிடமிருந்து நழுவியது உப்புவெளி பிரதேச சபை

திருமலை, ஜன.16

திருகோணமலை, உப்புவெளி பிரதேச சபையின் புதிய தவிசாளராக ரத்னாயக்கா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதனால் கூட்டமைப்பின் வசமிருந்த அந்தச் சபை பொதுஜன பெரமுனவின் வசமானது.

2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இரண்டாம் முறையாக நேற்று தோற்கடிக்கப்பட்டதற்கமைய சபையின் புதிய தவிசாளராக அவர் தெரிவுசெய்யப்பட்டார். உள்ளூராட்சி ஆணையாளர் சி.மணிவண்ணனின் தலைமையில் புதிய தவிசாளரைத் தெரிவுசெய்யும் கூட்டம் நேற்று நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் க.தங்கராசவும், பொதுஜன பெரமுன சார்பில் உறுப்பினர் ரத்னாயக்காவும் புதிய தவிசாளருக்கான போட்டியில் இறங்கினர். 22 உறுப்பினர்களைக் கொண்ட பிரதேச சபையில் கூடுதலான உறுப்பினர்கள் திறந்த வாக்கெடுப்புக்கு விருப்பம் தெரிவித்தனர். திறந்த வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பான வேட்பாளருக்கு ஆதரவாக 10வாக்குகளும், எதிர்த்துப் போட்டியிட்ட ரத்னாயக்காவுக்கு ஆதரவாக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதனால் புதிய தவிசாளராக பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ரத்னாயக்கா தெரிவானார். (ப)

## பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களில் பதிவு செய்யப்படாதவையே அதிகம்!

### மன்னார் விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார்,ஜன.16

மன்னார் மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களில் அதிக அளவிலானவை பதிவு செய்யப்படாத நிலங்களே என்று மன்னார் விவசாயப் பணிப்பாளர் நடராசா யோகராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாச்சியா தீவு மற்றும் பாவற்குளம் வான் கதவுகள் திறக்கப்பட்டதால் மல்வத்து ஓயாவின் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் மன்னார் கட்டுக்கரைக் குளம் வான் பாய்கிறது.

அத்துடன் தற்போது பெய்து வரும் மழையால் மாந்தை மேற்கு பிரதேசத்தின் சில பகுதிகளில் உள்ள வயல்களில் நீர் தேங்கி விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் பெரும்பாலானவை திணைக்களத்தில் பதிவு செய்யாது காடழித்து விவசாயம் செய்யப்பட்ட விவசாய நிலங்களாகும். அத்துடன் அழிவுகள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன - என்றார். (ஐ-213)

# கொடிகாமம் மீன் சந்தை மீண்டும் பழைய இடத்தில்

கொடிகாமம், ஜன.16

கொடிகாமம் பஸ் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் இயங்கிய கொடிகாமம் பொதுச் சந்தையின் மீன் விற்பனை அலகு மீளவும் பழைய இடத்தில் கடந்த வாரம் தொடக்கம் செயற்பட்டு வருகிறது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சந்தைகள் அதே இடத்தில் இயங்கத் தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து பருத்தித்துறை வீதியில் கொடிகாமம் பஸ் நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் மீன் வியாபாரம் இடம்பெற்று வந்தது. இதனால் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்குகிறோம் என அயலில் வசிப்போரால் சாவகச்சேரி பிரதேச சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து கொடிகாமம் பொதுச் சந்தையின் மீன் விற்பனை அலகு சுகாதார விதிமுறைகளுக்கமைய மீண்டும் சந்தைக்குள் இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை சாவகச்சேரி பொதுச் சந்தையின் மீன் விற்பனை அலகும் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-159,9)

# கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபை

அச்சுவேலி,ஜன.16

கோப்பாய் பிரதேச செயலக பிரிவு மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தா ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறும் என்று தவிசாளர் இ.கிருஸ்ணபிள்ளை அறிவித்துள்ளார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதுடன், பிணக்குகளுடன் தொடர்புடைய தரப்பினர் மட்டும் அமர்வுக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-11)

# சோமஸ்கந்த கல்லூரிக்கு புதிய அதிபர்

அச்சுவேலி,ஜன.16

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் புதிய அதிபராக சின்னத்தம்பி திரிகரன் நியமிக்கப்பட்டுள்ளார். அச்சுவேலி மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய இவர், கடந்த வாரம் சோமஸ்கந்தக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். (க-11)

# இடமாற்றம்

சாவகச்சேரி,ஜன.16

சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய இந்திக்க பிரியந்த வலிகாமம் வடிசாலைக்கு மதுவரி திணைக்களத்தால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவரின் இடத்துக்கு பருத்தித்துறை மதுவரி நிலைப் பொறுப்பதிகாரி த.அசோகரத்தினம் இடமாற்றம் செய்யப்பட்டு தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ஐ-9)

# விருந்துக்குச் சென்றவர் மரணம்

கொழும்பு, ஜன.16

ரத்மல்வல பிரதேசத்தில் உள்ள நண்பரின் வீட்டில் இடம்பெற்ற விருந்துக்குச் சென்ற நபரொருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார் என மித்தெனிய பொலிஸார் தெரிவித்தார்.

ரத்மல்வல கென்தகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த சீ.சஞ்ஜீவ லக்ஷான் (வயது - 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் அன்றைய தினம் நண்பரின் வீட்டிலேயே உயிரிழந்துள்ளார். உறக்கத்துக்குச் சென்ற அவர் எழும்பாத நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அவர் உயிரிழந்துள்ளதனை உறுதி செய்தனர். மரணத்துக்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி5)

# மியான்மருக்கான விமான சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜன.16

**இலங்கையிலிருந்து மியன்மாருக்கான விமான சேவைகளை 2021ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கலாம் என வெளிநாட்டு அமைச்சு ஏற்பாடு செய்த சந்திப்பில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.**




மியான்மாருடனான விமான இணைப்பை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து கலந்துரையாடுவதற்கான இந்த சந்திப்புக்கு வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தலைமை தாங்கினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான குறிப்பிடத்தக்க பௌத்த கலாசார இணைப்பின் காரணமாக, இலங்கைக்கும் மியான்மருக்கும் இடையிலான விமான இணைப்பு நீண்ட காலமாக கலந்துரையாடப்பட்டு வருகிறது என இந்தச் சந்திப்பில் மெய்நிகர் வழியில் பங்கேற்ற மியான்மருக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் நலின் த சில்வா தெரிவித்தார். மியன்மாரைச் சேர்ந்த சுமார் 300 பௌத்த பிக்குகள் தற்போது இலங்கையில் கல்வி கற்று வருவதுடன், மேலும் பல இலங்கைப் பிக்குகளும், பிரதிநிதிகளும் தியானம் மற்றும் ஏனைய மத நோக்கங்களுக்காக மியான்மருக்குப் பயணம் செய்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். இரு நாடுகளுக்குமிடையில் விமான இணைப்பை ஏற்படுத்துவதிலான தமது தீவிரமான ஆர்வத்தை மியான்மர் அரசு, சுற்றுலா சங்கங்கள் மற்றும் மியான்மர் ஜனாதிபதி ஆகியோர் வெளிப்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி

கொழும்பு, ஜன. 16



கொரோனாத் தொற்று தகவலை மறைத்து செயற்பட்ட காரணத்தால் கேகாலை பொலிஸ் அத்தியட்சகர் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரி ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரியின் மகன் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகிறார். இந்த நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி அவர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். எனினும் இந்த விடயத்தை பொலிஸ் அதிகாரி தமது மேலதிகாரிகளுக்கு அறிவிக்கவில்லை.

இதனையடுத்து அவரது மகனுக்கு கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டமையை அடுத்து குறித்த பொலிஸ் அதிகாரி ஜனவரி 2 ஆம் திகதி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவருக்கும் தொற்று இருப்பது இனங்காணப்பட்டது.

இதனால் குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் சிரேஸ்ட அதிகாரி உட்பட 15 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி5)



விதையனைத்தும் விருட்சமே அமைப்பால், ஆயிரம் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் 100 மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. வெள்ளாங்குளம் அ.த.க பாடசாலை, மூன்றாம்பிட்டி அ.த.க.பாடசாலை மற்றும் தேவன்பட்டி றோ.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க)

# பெண் பொலிஸ் அதிகாரிக்கு கொரோனாத் தொற்று உறுதி

கொழும்பு, ஜன. 16

மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார் என ஹல்துமுல்ல சுகாதார சேவை பிரிவு தெரிவித்தது.

குறித்த பெண் பொலிஸ் அதிகாரி நேற்றுமுன்தினம் வீடு திரும்பிய நிலையில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவரது அறிக்கை இன்று வெளியானது. அதற்கு முன் அவரது திருமண நிகழ்வுக்காக ஹல்துமுல்ல பிரதேசத்தின் பல இடங்களுக்கும் அவர் சென்று வந்திருப்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த நிலையில் கொரோனாத் தொற்று உறுதியானதால் அவர் சிகிச்சைக்காக சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி5)

# இலங்கையில் மனித உரிமை நிலைமை தற்போது மோசம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கவலை




**கொழும்பு, ஜன. 16**

**இலங்கையில் சிறுபான்மைச் சமூகம் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றது என, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாக்சி கங்குலி தெரிவித்**றனர்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. நாட்டின் சிறுபான்மை சமூகத்தினர் பாகுபாட்டையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்றனர்.

சிறுபான்மை சமூகத்தினரே கொரோனாவை திட்டமிட்டுப் பரப்பி வருகின்றனர் எனச் சுமத்தப்படும் பொய்யான குற்றச்சாட்டுகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசு துஷ்பிரயோகங்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்பதுடன், பொறுப்புக்கூறல், சாட்சிகளைப் பாதுகாத்தல் தொடர்பில் பிரேரணையொன்றை கொண்டு வரவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ.இ)

## தப்பித்து ஓடிய தொற்றாளர் மன்னாரில் மடக்கிப் பிடிப்பு

மன்னார், ஜன. 16

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கொரோனா உறுதி செய்யப்பட்டவர், அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில் பாதுகாப்புத் தரப்பினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் கொரோனாத் தொற்றாளருக்கு உதவியாக அவரது மகன் விடுதியில் தங்கியிருந்துள்ளார்.

மகனுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின்போது மகனுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனை அறிந்த மகன், நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

துரித நடவடிக்கைகளை மருத்துவமனை நிர்வாகம் மேற்கொண்டது. பாதுகாப்பு தரப்பினரின் உதவியுடன் மன்னார் எழுத்தூர்ப் பகுதியில் வைத்து நேற்று மாலை அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவரை சிகிச்சைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)





## உதவி வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன.16

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்திலுள்ள 100 மாணவர்களுக்கும், 75 குடும்பங்களுக்கும் 3லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான 100 காலணிகள் மற்றும் 100 சீருடைகள் 75 பொங்கல் பொதிகள் மற்றும் உலர் உணவு பொதிகள் என்பவை தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியத்தி னால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ரி5)

## சபை அமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.16

கரவெட்டி மத்தியஸ்தர் சபை அமர்வு கொவிட்19 தொற்றுக் காரணமாக மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்று தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (ந-35)

## வவுனியாவில் மேலும் 16 பேருக்குத் தொற்று

வவுனியா, ஜன. 16

வவுனியா நகரப் பகுதிகளைச் சேர்ந்த 16 பேருக்கு கொரோனாத் தொற்று நேற்றைய தினம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா நகர வியாபார நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. ஒரு பகுதி முடிவுகள் நேற்று காலை வெளியாகின. அதில் வவுனியா நகர வியாபார நிலையங்களில் பணிபுரியும் 16 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களுடன் சேர்த்து, வவுனியா நகர் பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 170 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா நகரப்பகுதிகளைச் சேர்ந்த மேலும் 500 பேரின் பி.சி.ஆர். முடிவுகள் கிடைக்கப்பெற்ற பின்னர் நகரின் முடக்கம் தளர்த்தப்படலாம் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மகேந்திரன் தெரிவித்தார். (ஒ,110)

## கொரோனா பாணியை நான் அருந்தவில்லை

### கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் தயாசிறி



கொழும்பு, ஜன.16

தேவிந்த லக்சிறி ரணசிங்க என்ற நபரால் தயாரிக்கப்பட்ட, கொரோனா ஒழிப்புப் பாணியைத் தான் அருந்தவில்லை என, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில், ஹிக்கடுவ கொரோனாச் சிகிச்சை மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வரும் இராஜாங்க அமைச்சர் தயாசிறி, தன்னையும் தனது குடும்ப உறுப்பினர்களையும் இந்தப் பாணியுடன் தொடர்புபடுத்த, அந்தப் பாணியைத் தயாரித்தவர் முயற்சிக்கிறார்.

எனினும், அதற்கு நான் இடமளிக்கவில்லை எனத் தெரிவித்த தயாசிறி ஜயசேகர, அந்தப் பாணி தனக்கு வழங்கப்பட்டது என அந்த நபரால் தெரிவிக்கப்படும் கருத்துகளையும் மறுத்துள்ளார். (ந-இ)



கொடிகாமம் அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி யோகேஸ்வரி பஞ்சாட்சரத்துக்கான மணிவிழா நிகழ்வு பாடசாலையில் கடந்த புதன்கிழமை அதிபர் ஐ.தேவஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (ஐ-159)

## வீரியமிக்க வைரஸ் தொற்றால் அச்சுறுத்தல் இல்லை



### டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.16

வீரியமிக்க கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில், நாட்டில் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார். எனினும், அந்தத் தொற்றாளரால் இலங்கைக்கு உடனடியான அச்சுறுத்தல் இல்லை என்று பொதுச் சுகாதார சேவைகளின் துணைப் பணிப்பாளர் ஜெனரல் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

மேலும், புதிய வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்துவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் இருந்து வந்த நபர், புதிய வகைத் தொற்றுக்கு இலக்காகி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் போதே, அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன. மரபணு வரிசைப்படுத்தலின் விளைவாகவே, அந்நபரின் புதிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.புதிய வைரஸ் சமூகத்துக்குள் நுழைவதைத் தடுக்க. நாட்டின் சுகாதார வழிகாட்டல்கள் இறுக்கமாக அமுல்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

# இன்றைய நாள்





**மேடம்:** புதிய வேலையில் சேருவது பற்றிய செய்தி வந்து சேரும். மனதில் உள்ள தன்னம்பிக்கையால் சவாலில் ஜெயிப்பீர்கள். ஆதாயம் தரும் வேலை ஒன்றில் அக்கறை காட்டுவீர்கள்.



**இடபம்:** வியாபாரத்தில் நல்ல லாபம் உண்டு. ஏமாற்றங்கள் தீரும். இங்கிதமான பேச்சால் பணியிடத்தில் எல்லோரையும் கவர் வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். புது வாய்ப்பு வரும்.



**மிதுனம்:** வெளிவட்டாரத்தில் உங்களுக்கு புதிய அனுபவம் உண்டாகும். உங்களின் முயற்சியால் சிறு பயணங்கள் சிறப்பாக அமையும். நெருக்கமானவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.



**கடகம்:** உங்கள் மேலுள்ள மரியாதை குறையாதபடி இருங்கள். பூர்வீக சொத்துப் பற்றி இருந்து வந்த தகராறுகள் அனைத்தும் அகலும். திடீர் பயணத்தை ரத்துச் செய்யப் பாருங்கள்.



**சிம்மம்:** தீட்டிய திட்டங்கள் ஓரளவு மட்டுமே வெற்றி பெறும். குடும் பத்தினர் உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுப்பார்கள். நிலையான வருமானத்துக்கு வழிபிறக்கும். அதிர்ஷ்டம் வரும்.



**கன்னி:** நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறை வேறும். உங்களின் நற்செயல் உற வினரின் பாராட்டைப் பெறும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதலாகப் பணி புரிவீர்கள்.



**துலாம்:** நீண்ட நாள்களாக வராமலிருந்த நற்செய்தி ஒன்று வந்து சேரும். பொது நலம் சார்ந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். உற வினர்கள், நண்பர்களிடையே உங்களின் மதிப்பு உயரும்.



**விருச்சிகம்** சமூக நிகழ்வுகள் மனதில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. சீரான அளவில் பணவரவு கிடைக்கும்.



**தனுசு** பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும். முயற்சியில் தடை ஏற்பட்டாலும் பொறுமையுடன் இருங்கள். பயங்களைத் தூக்கிப்போட்டு முன்னேறுங்கள்.



**மகரம்** சமூக நிகழ்வுகள் மனதில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. சீரான அளவில் பணவரவு கிடைக்கும்.



**கும்பம்:** அதிர்ஷ்ட வாய்ப்பு ஒன்று வந்து வியக்க வைக்கும் நாள். மனதில் குழப்ப எண்ணங்கள் அலைமோதும் நாள். மாமன் மூலம் மனதுக்கு இனிய விஷயம் நடைபெறும்.

**மீனம்:** குடும்பத்தில் மூத்தவர்களின் ஆதரவால் முன்னேற்றம் அடைவீர்கள். தன்னம்பிக்கை கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். பரபரப்பின்றி அமைதியாகச் செயல்படுவது நல்லது.

# இனப்பிரச்சினைக்கான தீர்வே மாகாண சபை முறைமை!!

## காஞ்சன ஜயரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜன.16

இனப்பிரச்சினைக்கான தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டது என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் மாகாண சபை உறுப்பினர் ஒன்றியத்தின் தலைவர் காஞ்சன ஜயரத்ன தெரிவித் துள்ளார்.


கொழும்பில் இடம்பெற்ற ஊடகவிய லாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்த பல்வேறு தரப்பினர் இணக்கம் தெரிவித்துள்ள னர்.

இந்தத் தேர்தலை இம்முறை மாத்தி ரம் பழையமுறையில் நடத்தி எதிர் காலத்தில் புதிய தேர்தல் முறை யில் திருத்தங்களை மேற்கொண்டு புதிய தேர்தல் முறைமையை நடைமுறைப் படுத்தல் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பிரதமரிடம் தெரிவித்துள்ளார்கள். மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது குறித்து எதிர்வரும் வாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப் பினர்களுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள் ளது. மாகாண சபை முறைமையை வெள்ளை யானை என்று விமர்சிப் பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. மாகாண சபை முறை மையில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இதற்காக மாகாண சபை முறைமையை இரத்து செய்வது நியாயமற்றது - என்றார். (ம-இ)





தெற்காசியாவின் மிகப்பெரிய

# டயர் தொழிற்சாலை இலங்கையில் திறப்பு

கொழும்பு, ஜன.16

தெற்காசியாவின் மிகப்பெரிய டயர் தொழிற் சாலை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வால் ஹொரணையில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வகவத்த ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் 155 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப் பட்டுள்ள இந்தத் தொழிற்சாலை அதிநவீன ஐரோப்பிய தொழில்நுட்பத்துடன் கூடிய அதிகமான உற்பத்தி, ஏற்றுமதியை இலக் காகக் கொண்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சிறியரக கார்களில் இருந்து கனரக வாகனங்கள் வரையில் அனைத்துவிதமான டயர்களும் இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட வுள்ளன. இந்த தொழிற்சாலையின் முதற் கட்ட செயற்பாட்டுக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்பட்டுள் ளது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# ஐ.தே.கவின் பதவிகளில் அதிரடி மாற்றங்கள்

## அமைப்பாளர் பதவி தொடர்பில் விரைவில் முடிவு என்கிறார் நவீன்

கொழும்பு, ஜன.16

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை ஏற்றுக் கொள்வதற்கு மறுத்துள்ள, அக்கட்சி யின் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க, இன்னும் 10 நாள்க ளில் அது குறித்து பதிலளிப்பேன் எனத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையில், கடந்த புதன்கிழமை நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், பதவிநிலைகளில் அதிரடியான மாற்றங்கள் செய்யப்பட் டன. அதில், புதுமுகங்கள் பல உள் ளீர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பழையவர்கள் சிலர் ஓரங்கட்டப்பட்டு உள்ளனர். இந்நிலையிலேயே, நவீன் திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அதில், பதில் பொதுச் செயலாளராகப் பதவி வகித்திருந்த ஷமல் சேனாரத்ன, கட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாள ராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுன ரண துங்க, டி.எம். சுவாமிநாதன் ஆகி யோர், கட்சியின் சிரேஷ்ட உப தலை வர்களாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# மாஸ்க் அணியாத 9 ஆயிரம் பேர் மீது வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஜன.16

முகக்கவசம் அணியாத குற்றச் சாட்டின் கீழ், 9 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய் யப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், மேல் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் முகக்கவசம் அணியாத குற்றச்சாட்டில் கைதான நபர் ஒருவர் கொவிட் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைக் கடைப்பிடிக் காத 473 நிறுவனங்களுக்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது எனவும் அவர் தெரி வித்துள்ளார். (ந-இ)

# ஜனவரி மாத ராசிபலன்கள்






பக்குவமாக எடுத்துச் சொல்லி எதிரில் இருப்பவர்களை திருப்தியடையச் செய்யும் குணமுடைய மகர ராசியினரே!

உங்களிடம் வாதத்திறமை இருக்கும். இந்த மாதம் பல வழிகளிலும் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். ஆனால் எந்த ஒரு வேலையிலும் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. திடீர் இடமாற்றம் ஏற்பட்டாலும் அது சாதகமாக அமையலாம் மூலம் சாதகம் உண்டாகலாம். வீண் செலவுகள், கவுரவக் குறைச்சல் ஏற்படலாம். மிகவும் கவனம் தேவை. தாய் தந்தையின் உடல்நிலையிலும் கவனம் செலுத்துவது நல்லது.

தொழில் வியாபாரத்தில் மெத்தனப் போக்கு காணப்பட்டாலும் குரு பார்வையால் தேவையான பணவரத்து இருக்கும். புதிய முயற்சிகளில் தாமதமான நிலை காணப்படும். நீண்ட நாள்களாக முடங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சல் காரியங்களில் இழுபறி என்ற நிலையைக் காண்பீர்கள். பேச்சைக் குறைத்து செயலில் ஈடுபடுவது நன்மையைத் தரும். சக ஊழியர்கள் ஆதரவுடன் எடுத்துக்கொண்ட காரியங்கள் சுமுகமாக முடியும்.

குடும்பத்தில் சுமுகமான நிலை காணப்படும். ஆனாலும் மனதில் குடும்பம் தொடர்பான கவலை, பிள்ளைகள் பற்றிய கவலை போன்றவை இருந்து வரும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வாக்குவாதத்தை முற்றிலும் தவிர்ப்பது நல்லது.

**பெண்களுக்கு:** தொல்லைகள் குறையும். வீண் செலவுகள் உண்டாகலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**கலைத்துறையினருக்கு:** உங்கள் கடமைகளைச் சரிவரச் செய்தால் நன்மைகள் அதிகமாகக் கிடைக்கும். அறிவாற்றலும் செயல்திறமையும் கூடும். பொருளாதாரத்தில் அபிவிருத்தி காணலாம். உழைப்பு வீண் போகாது.

**அரசியல் துறையினருக்கு:** நற்பெயர் கிட்டும். சுகம் பெருகும். மகிழ்ச்சி கூடும். பொருள் வரவு அதிகரிக்கும். பழைய பாக்கிகள் எளிதில் வசூலாகும். புகழ் தேடி வரும். ஒரு பெரிய புள்ளியின் அனுகூலம் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மாணவர்களுக்கு:** கல்வியில் மெத்தனப் போக்கு ஏற்படாமல் தீவிர கவனத்துடன் பாடங்களைப் படிப்பது வெற்றிக்கு வழி வகுக்கும்.

**உத்தராடம் 2, 3, 4 பாதம்:**
இந்த மாதம் தான் உண்டு தன்வேலை உண்டு என்று இருப்பது நல்லது. எதிர்பாராத செல்வச் சேர்க்கை உண்டாகும். அதே நேரத்தில் மனதில் வீண்கவலையும் ஏற்படலாம். எதிலும் ஒரு வேகம் உண்டாகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடும்போது கவனம் தேவை. உல்லாசப் பயணங்கள் செல்ல நேரலாம் தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தனப் போக்கு நீங்கி வேகம் பிடிக்கும். தொழில் விஷயமாக வெளியூர் செல்ல நேரலாம். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்க தாமதம் ஏற்படலாம்.

**திருவோணம்:**
இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்கப் பெற்று அதனால் நன்மை அடைவார்கள். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். வீட்டுக்குத் தேவையான பொருள் வாங்குவதால் செலவு ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கி நெருக்கம் ஏற்படும். பிள்ளைகளுடன் மனதுக்குப் பிடித்த இடத்துக்குச் சென்று பொழுதைக் கழிப்பீர்கள்.

**அவிட்டம் 1,2 பாதம்:**
இந்த மாதம் எதிர்பார்த்த செல்வச் சேர்க்கை உண்டாகும். மனதில் வீண் கவலை ஏற்படலாம். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியைப் பற்றிய மனக்கவலை உண்டாகும்.

பயணங்கள் மகிழ்ச்சிகரமாக இருக்கும். வீண் அலைச்சல்; காரியத்தடை ஏற்படலாம். கவனம் தேவை. எதிர்ப்புகள் விலகும். எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். மனதில் நிம்மதி உண்டாகும். உதவி என்று வருபவர்களுக்கு தயங்காமல் உதவிகளைச் செய்வீர்கள். இரவில்

ஜனாஸா விவகாரம்:

## தீர்மானிக்கும் பொறுப்பு நிபுணர் குழுவிடமே!!

### அரசியல்வாதிகளைத் தலையிட வேண்டாம் என்கிறார் பியல் நிஷாந்த

கொழும்பு, ஜன.16

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை, அடக்கம் செய்வதா, தகனம் செய்வதா என்ற விடயத்திலிருந்து அரசியல்வாதிகளை ஒதுக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சிங்கங்களாக வேடமிட்டிருக்கும் அரசியல் நரிகளால், மக்களைக் குழப்பமுடியாது. அசாத்சாலி, சிங்கம் போன்று வேடமிட்டிருக்கும் நரி. தீர்மானிக்கும் பொறுப்பை, சுகாதார பிரிவின் நிபுணர்களிடம் ஒப்படைக்க வேண்டும். சுகாதாரப் பிரிவினரின் தீர்மானத்தை நாட்டுப் பிரஜைகள் என்றவகையில் நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அசாத் சாலியை விட திமிர்பிடித்து இருந்தவர்கள் அழிக்கப்பட்டுள்ளனர். பலமிக்க தலைமைத்துவம் நாட்டை ஆட்சி செய்கிறது. ஆகையால், எதிர்க்கட்சி உள்ளிட்ட அரசியல்வாதிகள் மிகவும் புத்திசாதுரியத்துடன் செயற்பட வேண்டும் என்றார். (ற-இ)

## ‘வட்ஸப்’ பயன்பாடு பாதுகாப்பற்றது

கொழும்பு, ஜன.16

‘வட்ஸப்’ செயலியைப் பயன்படுத்துவது பாதுகாப்பானதாக அமையாது என இலங்கைத் தொலைத்தொடர்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஓசத சேனாநாயக்க எச்சரித்துள்ளார். சமூக வலைத்தள நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தனது பயநர்களின் ரகசியத்தன்மையை முழுமையாகப் பாதுகாத்தல் என்பதை ‘வட்ஸப்’ நிறுவனம் இரத்துச் செய்துள்ளதால் அச் செயலியை பயன்படுத்துவது என்பது மிகவும் ஆபத்தானது. எமது நிறுவனம் இது தொடர்பில் உன்னிப்பாக அவதானித்து ஆய்வுகளை நடத்திவருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

நீத்தார் நயப்புரை

## காரைமண் தந்த ஆளுமையே அமரர் அதிபர் கே.கே.நடராசா

ஈழத்துச் சிதம்பரத்தை தன்னகத்தே கொண்டதும், பண்பாட்டு விழுமியச் சிறப்புகள் மிகுந்ததுமான காரைநகரினிலே, பயிரிக்கூடல் பகுதியில் 1929ஆம் ஆண்டு ஜூலை 7ஆம் திகதியன்று பிறந்தவரே அமரரான அதிபர் கே.கே.நடராசா ஆவார். அமரர்களான கார்த்திகேசு-வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த மகனான இவர் கடந்த மாதம் 17ஆம் திகதி இயற்கை எய்தினார்.

அமரரான கே.கே.நடராசா தனது ஆரம்பக்கல்வியை காரைநகர் சுப்பிரமணியம் வித்தியாசாலையிலும், இடைநிலைக்கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்றார். இவர் விஞ்ஞானத்துறையில் உயர் கல்வியையும் பெற்றுக்கொண்டார். கணிதம் இராசாயனவியல் பாடங்களை தான் கற்பித்த கல்லூரிகளான காரைநகர் இந்துக்கல்லூரியில் 1952ஆம் ஆண்டு தொடக்கம் 1959ஆம் ஆண்டு வரையிலும் நீர்வேலி அத்தியார் இந்துவில் 1960ஆம் ஆண்டு தொடக்கம் 1962ஆம் ஆண்டு வரையிலும் கற்பித்துள்ளார். அத்துடன் 1952 - 1969ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காரை யாழ்ற்றன் கல்லூரியின் அதிபராகவும், 1970 - 1971ஆம் ஆண்டுகளில் காரை இந்துக் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். கல்விப் பணிகளுக்கு அப்பால் பொதுப் பணிகளிலும் அதிபர் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். அத்தோடு காரை பயிரிக்கூடல் முருகன் ஆலயத் திருப்பணியிலும், அதன் நிர்வாகத்திலும் பங்காற்றியுள்ளார். இத்தனை சிறப்புக்களின் சிகரமாகத் திகழ்ந்த அமரர் அதிபர் கே.கே.நடராசா தனது தொண்ணூற்று இரண்டாவது அகவையில் உயிர்நீத்தார். அவரின் ஆத்மா சாந்தியுற ஈழத்து சிதம்பரத்திறையும் தில்லைக் கூத்தனின் திருப்பாதங்களைப் பணிந்து இறைஞ்சுவோமாக.

ஆறுமுகம் தங்கரத்தினம்


### வீதி விபத்துகளால்
## ஒரே நாளில் 13 பேர் சாவு

கொழும்பு, ஜன.16
வீதி விபத்துகள் காரணமாக நேற்றுமுன்தினம் மாத்திரம் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
அவற்றில் 7 மரணங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்து இதனால் ஏற்பட்டவை, ஏனைய 06 பேர் இதற்கு முன்னர் இடம்பெற்ற விபத்துக்களில் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, வேடிக்கைக்காக அதிக வேகத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்திய 18 முதல் 25 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள் 12 பேர் பிலியந்தலை பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

### தேர்தல்களில்
## ரஞ்சன் ராமநாயக்க போட்டியிட முடியாது



கொழும்பு, ஜன. 16
ரஞ்சன் ராமநாயக்க கடூழிய சிறைத் தண்டனையை நிறைவு செய்யும் நாளிலிருந்து, 7 ஆண்டுகளுக்கு அவருடைய குடியுரிமை இரத்துச் செய்யப்படும் என்று பேராசிரியர் சட்டத்தரணி பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.
இந்தக் காலப் பகுதியில் அவருக்கு எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
எனினும், ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கினால், அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியும் எனவும் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.
உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 4 வருட கடூழியச் சிறைத் தண்டனை மற்றும் 7 வருட குடியுரிமை இரத்து ஆகிய காலப் பகுதிகள் நிறைவடைந்ததன் பின்னரே அவருக்கு தேர்தல்களில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ,இ)



## எம்.பிக்கள் எவருக்கும் தொற்று இல்லையாம்!

கொழும்பு, ஜன.16
நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு கடந்த புதன்கிழமை பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது.
இதன்படி 15 உறுப்பினர்களின் பரிசோதனை முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவர் களில் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# எம்.பிகளுக்கு தொற்றுவந்தபின் மருந்தைப் பெறுவதில் ஆர்வம்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் காட்டம்

**கொழும்பு, ஜன.16**
**நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே கொரோனாத் தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்வதில் அரசு கூடிய ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது என அகில இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்த சங்கத்தின் தலைவர் மருத்துவர் கிசாந்த தசநாயக்க தெரிவித்துள்ளதாவது,
நாட்டில் பெருமளவானவர்கள் பாதிக்கப்பட்டவேளை தடுப்பு மருந்து தொடர்பில் கருத்துத் தெரிவிக்காத அதிகாரிகள் தற்போது அதை வழங்குவது தொடர்பில் கருத்து வெளியிட ஆரம்பித்துள்ளனர்.
கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக பல நிறுவனங்கள் மருந்துகளை தயாரித்துள்ளன. எனினும் இலங்கை முன்னர் இவற்றில் கவனம் செலுத்தவில்லை.
புராணக்கதைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள தீர்வுகளையே நாடியது. அதனாலேயே தடுப்பு மருந்தை இறக்குமதி செய்வதை அரசு தாமதப்படுத்தியது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## 3 இலட்சம் பெறுமதியான சிப்பிகள் மன்னாரில் மீட்பு

மன்னார், ஜன.16
மன்னார் பஸ் தரிப்பிடத்துக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில், சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 977 சிப்பிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், சந்தேகநபர் ஒருவரையும் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர். அனுமதிப்பத்திரம் இன்றி, மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்தச் சிப்பிகளின் பெறுமதி, மூன்று இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள் ளது.
கைது செய்யப்பட்டவர் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளுக்காக கைப்பற்றப்பட்ட சிப்பிகளுடன் அவரை, மன்னார் மீன்வள மற்றும் நீரியல்வள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவித்தனர். (ந-இ)



## கஜமுத்துக்களுடன் ஐந்து பேர் கைது!

அம்பாந்தோட்டை, ஜன.16
அம்பாந்தோட்டை பகுதியில் நான்கு கஜமுத்துக்களுடன் பெண் ஒருவர் உட்பட ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய அம்பாந்தோட்டைப் பகுதியில் விற்பனை செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்ட வேளையே கஜமுத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ற-இ)

## நாட்டு மக்களின் உயிருடன் கிரிக்கெட் விளையாடும் அரசு

### ஐக்கிய மக்கள் சக்தி கடும் கண்டனம்



கொழும்பு, ஜன.16
பிரிட்டன் கிரிக்கெட் வீரர்களை இலங்கைக்கு அழைத்ததன் மூலம் இலங்கை மக்களின் உயிர்களுடன் அரசாங்கம் கிரிக்கெட் விளையாடுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாடியுள்ளது.
இது தொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்து ஜயவர்த்தன தெரிவித்துள்ளதாவது,
பிரிட்டனில் புதியவகை வீரியமிக்க கொரோனா வைரஸ் பரவிவரும் வேளையில் பிரிட்டன் கிரிக்கெட் அணியை இலங்கைக்கு அழைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முடிவு தொடர்பிலும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். ஏனைய நாடுகள் புதியவகை வைரஸ் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வேளை இலங்கை பிரிட்டன் கிரிக்கெட் வீரர்களை நாட்டுக்கு அழைத்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

## கடற்படை பிரதானியாக சுமித் வீரசிங்க

கொழும்பு, ஜன.16
இலங்கை கடற்படையின் பிரதானியாக ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார் என கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ந-இ)

## சிறை செல்ல தயாராகுக!

கொழும்பு, ஜன.16
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசனே சிறைச்சாலைக்குச் செல்லத் தயாராக வேண்டும் என சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார். இலங்கையில் தங்கியுள்ள ரோஹிங்கிய அகதிகளுக்கு எதிரான போராட்டத்துக்கு தலைமை தாங்கிய நிலையில், உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ற-இ)

## வைரஸ் கட்டுப்படுத்தலுக்கு அதிகாரிகள்

கொழும்பு, ஜன.16
இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவும் வைரஸின் பாதிப்புகளைக் கண்டறியவும் நாட்டின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என, பொதுச் சுகாதார சேவைகளின் துணைப் பணிப்பாளர் ஜெனரல் டொக்டர் ஹேமாந்த ஹேரத் தெரிவித்தார்.
மேலும், சில நாடுகளில், நிபா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது என செய்திகள் கிடைத்துள்ளன. இந்நிலையில் நாட்டில் நிபா வைரஸ் உள்ளிட்ட, பிராந்தியத்தில் பரவும் பிற வைரஸ்கள் தொடர்பிலும் சுகாதார அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். இந்த வைரஸ் தொடர்பான தகவல்களை, உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கைக்கு வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட்: அசுரப் பலத்துடன் இங்கிலாந்து அணி

**காலி, ஜன. 16**

**இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றைய தினத்தின் முடிவில் இங்கிலாந்து அணி அசுரப்பலமாக உள்ளது. இதுவரை 185 ஓட்டங்களை முன்னிலையாக இங்கிலாந்து அணி பெற்றுள்ளது.**



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி டெஸ்ட்டின் முதலாவது நாளிலேயே (நேற்றுமுன்தினம்) அனைத்து இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் சந்திமல் 28 ஓட்டங்ளையும் மத்தியூஸ் 27 ஓட்டங்களையும், டசுன் சானக 23 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் பெஸ் 5 இலக்குகளையும், புரோட் 3 இலக்குகளையும், லீச் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் இரு இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. பேரஸ்ரெளவ் 47 ஓட்டங்களுடனும், ரூட் 66 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறாமல் ஆட்டமிழந்தார் பேர்ஸ்ரெளவ். எனினும் லோரன்ஸ், ரூட் இணைந்து இலங்கை அணியை மிரட்டினர். ஆணியடித்ததுபோல நின்று அற்புதமாக விளையாடிய ரூட் சதம் கடந்தார். லோரன்ஸ் தன் பங்குக்கு அரைச்சதம் கடந்தார். இங்கிலாந்து 304 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லோரன்ஸ். மழையும் அவ்வப்போது குறுக்கிட இங்கிலாந்து அணி 4 இலக்குகளை இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் நாள் முடிவு கண்டது. ரூட் 168 ஓட்டங்களுடனும், பட்லர் 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)


# வலுவான அத்திபாரத்தை அமைக்க ஆஸி. முயற்சி

பிரிஸ்பெய்ன், ஜன. 16



இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் வலுவான நிலையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்துள்ளது ஆஸ்திரேலியா. தொடரின் முதல் மூன்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றுள்ளன. கிண்ணத்தை வெல்லும் அணியைத் தீர்மானிக்கும் நான்காவது டெஸ்ட் ஆட்டம் பிரிஸ்பெய்ன் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக வோர்ணர் மற்றும் மார்செஸ் ஹரிஸ் இருவரும் களமிறங்கினர். ஒரேயொரு ஆட்டத்துடன் ஆட்டமிழந்தார் வோர்ணர். சிராஜ் அவரை வெளியேற்றினார். அடுத்த சில நிமிடங்களில் ஹரிஸும் பவிலியன் திரும்பினார். 17 ஓட்டங்களில் இரண்டு இலக்குகளை இழந்தது ஆஸ்திரேலியா. அதன் பின்னர் இணைசேர்ந்த சிமித் மற்றம் லபுஸ்சேன் சரிவில் இருந்து அணியை மீட்டெடுத்தனர். 36 ஓட்டங்களுடன் சிமித்தை வெளியேற்றினார் சுந்தர். லபுஸ்சேன், வேட் இணைந்து ஆஸ்திரேலியாவைப் பலம் பெறச் செய்தனர். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. ஆஸ்திரேலியா 200 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 45 ஓட்டங்களுடன் வேட் நடராஜனால் வீழ்த்தப்பட்டார். இது நடராஜன் சர்வதேச அரங்கில்பெற்ற முதலாவது இலக்காக அமைந்தது. சதம் கடந்தார் லபுஸ்சேன். 108 ஓட்டங்களுடன் லபுஸ்சேனையும் நடராஜன் வீழ்த்தினார்.

நாள் முடிவடைந்தபோது ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கிறீன் 28 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் பெய்ன் 38 ஓட்டங்களுட




ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் நேதன் லையன் நேற்றுத் தனது 100ஆவது ஆட்டத்தில் களமிறங்கினார்.
இந்திய அணிக்கு எதிராக பிரிஸ்பெய்னில் நேற்று ஆரம்பமான ஆட்டத்தில் இடம்பிடித்ததன் மூலம் இந்த மைல்கல்லை லையன் எட்டினார். இதற்கு முன்னரான தனது 99 ஆட்டங்களிலும் ஒட்டுமொத்தமாக 396 இலக்குகளை லையன் வீழ்த்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




# இந்திய அணியில் இரண்டு தமிழ் வீரர்கள் அறிமுகம்!!

பிரிஸ்பெய்ன், ஜன. 16

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நேற்று ஆரம்பமான நான்காவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் தமிழ் வீரர்கள் இருவர் அறிமுக வீரர்களாக களமிறக்கப்பட்டனர். பும்ரா காயமடைந்ததைத் தொடர்ந்து அவரின் இடத்துக்கு நடராஜன் களமிறக்கப்பட்டார். அதேபோல் அஸ்வின் காயமடைந்ததை அடுத்து அவரின் இடத்துக்கு வொஷிங்டன் சுந்தர் களமிறக்கப்பட்டார். நடராஜன் தனது முதல் இலக்காக மத்தியூட் வேட்டை வீழ்த்தினார். அதேபோல் வொஷிங்டன் சுந்தர் தனது முதலாவது இலக்காக சிமித்தை ஆட்டமிழக்கச் செய்தார். (ம)



# மெல்லக் கொல்லும் கழிவுகள்!



சி.நற்குணலிங்கம்

முறையாக அகற்றப்படாத கழிவுகள் எனப்படுபவை மனித குலத்துக்கு ஆபத்து மிக்கவை. தன் உணவை மெல்லமெல்ல ஆக்கிரமித்து விழுங்கும் ஒரு மலைப்பாம்பைப்போல இந்த பேரரக்கன் மனித குலத்தை படிப்படியாக ஆக்கிரமித்து விழுங்கிக்கொண்டிருக்கின் றான்.

சூழலுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் இடைத்தாக்கம் செய்துகொண்டு வாழ்ந்துவரும் மனிதனால் சுற்றாடலுக்கு ஏற்படுத்தப்படும் மாசுக்களால் மனித குலமே மாசடைகின்றது. சுற்றாடல் எம்மைப் பாதுகாக்க வேண்டுமாயின் நாம் சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும். இலங்கையில் ஏறக்குறைய ஒரு நாளைக்கு 2 ஆயிரத்து 740 மெற்றிக் தொன் கழிவுகள் சேர்கின்றன. இது நாம் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக அமைகின்றது.

மக்களால் கழிவுப் பொருள்கள் ஒழுங்கற்ற முறையில் சில பகுதிகளில் கொட்டப்படுவதாலும், வடிகால்களில் கழிவு நீர் அகற்றப்படாத நிலையில் துர்நாற்றம் வீசுவதாலும் சூழல் அதிகம் மாசடைகிறது. இதனால் நோய்கள் ஏற்படுகின்றன. கைத்தொழில், விவசாயம், மீன்பிடி, வர்த்தகம், உணவு, சந்தைப்படுத்தல் தொடர்பாக பல்வகை கழிவுகள் பொது இடங்களில் வீசப்படுகின்றன. திரவக் கழிவுகள் இலகுவாக அகற்றப்பட வேண்டியவை. ஆனால் திரவக் கழிவுகள் வடிந்தோடும் வாய்க்கால்களில் திண்மக் கழிவுகளையும் வீசிவிடுவதால் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு மலேரியா, டெங்கு போன்ற தீவிர உயிர்கொல்லி நோய்களையும் ஏற்படுத்தி விடுகின்றன. அத்துடன் நிலம் மற்றும் நிலத்தடி நீர் மாசடைவதால் மனித மற்றும் இதர உயிரினங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கு இதுவரை உரிய தீர்வு எட்டப்படவில்லை. கழிவுப் பொருள்களை பாதுகாப்பாக அகற்றும் விடயமானது தற்போது பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்ய வேண்டிய பொறுப்பு அந்தந்த பிரதேச உள்ளூராட்சி சபைகளுக்கு உரியதாகும். உயிர்ச் சூழலுக்கு அச்சுறுத்தலாக உள்ள கழிவுகளின் பாதிப்பிலிருந்து விடுபட 'கழிவு மேலாண்மை" முக்கியமானதாகும்.

### பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் சில

கழிவு முறைகள் சிறந்த முறையில் முகாமை செய்யப்பட வேண்டுமாயின் மூன்று வழிமுறைகள் சிறப்பாகப் பின்பற்றப்பட வேண்டும். அதாவது திரும்பவும் பாவித்தல், மீள் சூழற்சிக்கு உட்படுத்தல், வேறொன்றுக்குப் பதிலாகப் பாவித்தல் ஆகிய செயற்பாடுகளை கழிவு மேலாண்மை உள்ளடக்கியுள்ளது.

சிதைவடையும் சேதனக் கழிவுகளை பசளையாக மாற்றுதல், சிதைவடையாத சில கழிவுப் பொருள்களை, உலோகப் பொருள்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்துதல், சிதைவடையும் சேதனக்கழிவுகளையும் ஏனைய திண்மக் கழிவுகளையும் தனித்தனியாக தரம்பிரித்து வைத்தல், பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனைகளை முழுமையாகத் தடைசெய்தல், கழிவுகளை வைத்து கூட்டுப்பசளை தயாரித்தல், பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லல், சிறந்த வடிகாலமைப்பு முறையில் கவனம் செலுத்துதல், ஒழுங்கான மேற்பார்வைச் சட்டத்துக்கு மதிப்பளித்தல், நகர சுத்திகரிப்பாளர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், கழிவுகளைச் சிறந்த முறையில் வெளியேற்றுவதற்கான முறையான திட்டங்களை முன்னெடுத்தல் ஆகிய படிநிலைகளை இந்த மூன்றம்சத் திட்டத்தின் மூலமாக மேற்கொள்ள முடியும்.

திண்மக்கழிவு என்பது, நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளிலிருந்து உருவாகும் பொருளாதாரப் பெறுமதியற்ற திண்மப்பொருள் என்பதே பொதுவான எண்ணப்பாடு. உண்மையில் இவைபெறுமதி மிக்கவை. உகந்த முகாமைத் துவத்தின் ஊடாக இப்பொருள்களால் நன்மை பெறலாம். சேதனப் பசளைகள், உரம் என அவற்றை உருமாற்றி விற்பனை செய்யலாம்.



> சூழலுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் இடைத்தாக்கம் செய்துகொண்டு வாழ்ந்துவரும் மனிதனால் சுற்றாடலுக்கு ஏற்படுத்தப்படும் மாசுக்களால் மனித குலமே மாசடைகின்றது. சுற்றாடல் எம்மைப் பாதுகாக்க வேண்டுமாயின், நாம் சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும். இலங்கையில் ஏறக்குறைய ஒரு நாளைக்கு 2 ஆயிரத்து 740 மெற்றிக் தொன் கழிவுகள் சேர்கின்றன. இது நாம் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக அமைகின்றது.

### பொறுப்புணர்ந்து செயற்படுவோம்

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட துப்புரவுப் பணியின்போது ஏராளமான கழிவுப் பொருள்கள் கால்வாய்களில் இருந்து வெளியில் எடுத்துக் குவிக்கப்பட்டன. மலைபோல் குவிந்த அந்தக் கழிவுகளின் மூலம் கழிவகற்றலில் நாம் எவ்வளவு தூரம் அக்கறையின்றி உள்ளோம் என்பது புலனாயிற்று. இனியாவது உரியவர்கள் கவனமெடுத்து கழிவுகளை ஒழுங்காக முகாமை செய்ய வேண்டும். இல்லையேல் கழிவுகளைவிட மதிப்பற்ற நிலைக்கு நாம் தள்ளப்படுவோம். அதுமட்டுமல்ல, கழிவு அதுவல்ல நாம்தான் என்ற நிலை ஏற்படக் கூடாது.

## இடம்மாறியது நூலக நிறுவனம்

யாழ்ப்பாணம், ஜன.16

இதுவரை காலமும் கொக்குவில், ஆடியபாதம் வீதியில் இயங்கி வந்த, நூலக நிறுவனம், இல.55 சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குளி என்ற முகவரிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. அழிந்து போகும் நிலையிலுள்ள ஆவணங்களைப் பாதுகாத்துப் பேணுதல் என்ற அடிப்படையில் 2005ஆம் ஆண்டு முதல் அவற்றை தேடிச் சேகரித்து எண்ணிம ஆவணமாக நூலக நிறுவனம் ஆவணப்படுத்தி வருகின்றது. இந் நிறுவனமானது தனது 16 ஆவது ஆண்டுகள் நிறைவில் 97ஆயிரம் ஆவணங்களுடன் 17 ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-இ)

நேற்றுப் பிரசுரமான இதே செய்தியில் நூலக நிறுவனத்தின் இலச்சினைக்குப் பதிலாக, தொழில்நுட்ப கோளாறு காரணமாக யாழ். பொது நூலகத்தின் ஒளிப்படம் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## மாடு திருடிய குற்றச்சாட்டு: சந்தேக நபருக்கு மறியல்

சாவகச்சேரி ஜன. 16

மாட்டைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாவளை இயற்றாலைப் பகுதியில் கொட்டிலுக்குள் கட்டப்பட்டிருந்த நான்கு மாடுகளில் நாம்பன் மாடு ஒன்று கடந்த 13 ஆம் திகதி இரவு திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மாட்டின் உரிமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபரை எதிர்வரும், 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ப-9)

## கொடியேற்றம்

கொடிகாமம்,ஜன.16

சாவகச்சேரி வாரிவனநாதர் திருக்கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், 25 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 26 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

அடியார்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து ஆலயத்துக்கு வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)

# ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல்: விசாரணைக்கு திகதி அறிவிப்பு

கொழும்பு, ஜன.16

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் தாக்குதலுக்கு முன்னர் போதியளவு தகவல்கள் கிடைக்கப்பெற்ற போதிலும் அதைத்தடுத்து நிறுத்தாததன் ஊடாக அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைக்கான திகதியை உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனெக அளுவிகார, சிசிரத் ஆப்ரூ, பிரியந்த ஜயவர்தன, எல்.டீ.பீ தெஹிதெனிய, மூர்து பெர்னாண்டோ மற்றும் பிரீத்தி பத்மன் சூரசேன ஆகிய 7 பேர் கொண்ட நீதிபதிகள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இந்த மனு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 8, 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படும் என்று நீதிபதிகள் குழு தெரிவித்துள்ளது. (ர-இ)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் தைப்பொங்கல் தின நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதிபர் திருமதி இ.மீனலோஜினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தரம் 6 முதல் க.பொ.த உயர்தரம் வரையுள்ள ஒவ்வொரு தரங்களையும் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து வகுப்பு ரீதியாக தனித் தனியாக பொங்கல் வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (159)

## மரண அறிவித்தல்



### வைரமுத்து பரமேஸ்வரி

பிறப்பு 18 . 09 . 1948

இறப்பு 15 . 01 . 2021

ஆனைக்கோட்டை சிவன் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து பரமேஸ்வரி அவர்கள் நேற்று (15.01.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா வைரமுத்துவின் அன்பு மனைவியும், ரஞ்சனாதேவி, மஞ்சுளாதேவி, சரோஜினிதேவி, சிவனேஸ்வரன், கோமளாதேவி, சுபாசினிதேவி மற்றும் குகனேஸ்வரனின் அன்புத் தாயாரும், யோகராசா, பத்மநாதன், யோகராசா, பிரேமசுதா, புலேந்திரநாதன் மற்றும் காளிதாசின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 15.01.2021 பி.ப 1.00 மணியளவில் இடம்பெற்று மெய்யானது ஆனைக்கோட்டை கல்லுண்டாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இதனை உடனடியாக அறியத்தரமுடியவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். உற்றார் உறவினர்கள் இப்பிந்திய அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புக்கு:
077 382 1120

தகவல்
உறவினர்கள்.

# 29 நாள்களின் பின்னரும் ஜனாஸாவில் தொற்று


கொழும்பு, ஜன.16

கொரோனாவால் மரணித்த ஒருவரின் சடலத்தில் 29 நாள்களுக்குப் பின்னர் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்திருந்தார். அவரது ஜனாஸாவைப் பொறுப்பேற்பதற்கு அவரது உறவினர்கள் முன்வரவில்லை. தொடர்ந்தும் அவரது சடலம் குளிரூட்டப்பட்ட பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் 29 நாள்களின் பின் ஜனாஸாவைத் தகனம் செய்ய சுகாதாரப் பணியாளர்கள் பொறுப்பேற்றபோது பி.சி.ஆர் பரிசோதனையொன்றை நடத்தியுள்ளனர்.

இதன்போதே அந்த ஜனாஸாவில் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (வ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் . 14 . 01 . 1942



மறைவு . 15 . 01 . 2021

### நவரத்தினம் பாலசுப்பிரமணியம்

அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் பாலசுப்பிரமணியம் நேற்று (15.01.2021) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை செல்வராணி இராசம்மா மற்றும் பாக்கியம், தங்கரத்தினம், பறுவதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தெய்வானப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவநேசத்தின் அன்புக் கணவரும், தனுஜா (கனடா), சர்மிளா (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி), பிரசாந்தன் (தொழில்நுட்பவியலாளர், Seirra Telecom) ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமாரன் (பொறியியலாளர், கனடா), சத்தியசீலன் (சிரேஸ்ட உதவிச் செயலாளர், பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு) ஆகியோரின் மாமனாரும், ஆருஷி, அக்ஸரா, அபிராம், அனிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2021) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்து ம்யானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம் .

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### இராமலிங்கம் கந்தசாமி

களபூமி காரைநகர் இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி விதானையார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கந்தசாமி நேற்று (15.01.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் தங்கமுத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற றெஜினாவின் அன்புக் கணவரும், விஜிகாந்தன் (பிராந்திய முகாமையாளர் Tokyo Cement), விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பராசக்தி, சத்தியபாமா, தங்கராஜேஸ்வரி, ருக்மணிதேவி (இத்தாலி), தவமலர் (உதவித் தபால் அதிபர்-தபாலகம், சுண்டுக்குளி), சற்குணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சித்திரா, Dr. விமலேந்திரன் (மார்பு நோய் சிகிச்சை நிலையம்-பண்ணை) ஆகியோரின் மாமனாரும், வினோஷாயினி, வித்தியாயினி, ஷறோமி, டிரக்ஷா, தக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (17.01.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.37, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 755 7971

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka
T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## பதவிவெற்றிடம்
## வாகனமின்பொறியாளர்
## (AUTO ELECTRICIAN)

ஹலோட்ரஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 23 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டுதொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

நாம் மேலும் சில வாகன மின் பொறியாளர்களை ஏற்கனவே இருக்கும் எங்களுடைய வேலைத்தள அணியினருடன் சேர்த்துக் கொள்ள விரும்புகின்றோம்.

**தேவைப்படும் தகைமைகள்**

- 5 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

  அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கைச் சாரதி அனுமதிப் பத்திரத்தினைக் கொண்டிருக்கவேண்டும். இதற்கு மேலதிகமாக மின்னணுக் கட்டுப்பாட்டு அமைப்புத் தொடர்பான அறிவினைக் கொண்டிருப்பதும் ஆங்கில மொழியில் பேசும் திறனைக் கொண்டிருப்பதும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

சம்பளமும் அதனுடன் தொடர்புபட்ட நன்மைகளும் அனுபவம் மற்றும் தகமைகளைப் பொறுத்து அமையும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிபரக் கோவை மற்றும் தொடர்பு கொள்ள வேண்டியவிபரங்கள் என்பவற்றை 21 தை 2021 வியாழக் கிழமைக்கு முன்பாக கீழ் உள்ள தபால் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்

**த ஹலோ ட்ரஸ்ற்,**
**450, திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**
**E-mail: hr@halosrilanka.org**

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka
T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## கண்ணிவெடியகற்றுனர்களுக்கான
## பதவி வெற்றிடம்

ஹலோ ட்ரஸ்ற் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 23 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்ரஸ்ற் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப்தாரர்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்பரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும், எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்ள முடியும். எனவே இதனை கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பு : விண்ணப்பங்கள் முல்லைத்தீவு மாவட்ட நகரப் பிரதேசங்களை (கொக்குத்தொடுவாய், அளம்பில்). அண்டிய பகுதிகளில் வசிக்கும் பெண்களிடமிருந்து மட்டுமே எதிர் பார்க்கப்படுகின்றன. ஏனெனில் எம்மிடம் ஏற்கனவே போதிய அளவு ஆண் பணியாளர்கள் உள்ளனர்.

**மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 21ம் திகதி தை மாதம் 2021 வியாழக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.**

**த ஹலோ ட்ரஸ்ற்,**
**450, திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
04.06.1946

உதிர்வு
29.01.2020

அமரர் திருமதி

## கமலேஸ்வரி ஆறுமுகம்

(தாவடி)

திதி: தை வளர்பிறை சதுர்த்தி


அவனியிலே அவதரித்து
ஆலதருவாய் அன்பு கொண்டு
இறைநம்பிக்கை இறுகப் பற்றி
ஈகையே உங்கள் சிறப்பியல்யாக்கி
உறவுகளுக்காய் உழைத்து
ஊர் போற்ற வாழ்ந்து
எழுத்தறிவித்து
ஏழ்மை காட்டி
ஐம்புலன் அடக்கி
ஒழுக்கம் நிலைநாட்டி - நாம்
ஓங்கி வாழ வழிசமைத்து
ஓய்வெடுத்துக் கொண்டாயோ
அம்மா!

22, முருகன் கோவிலடி,
தாவடி தெற்கு.
077 255 0807

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
07 . 07 . 1929



மறைவு
17 . 12 . 2020

## அமரர் திரு. கார்த்திகேசு நடராஜா

(இளைப்பாறிய கல்லூரி அதிபர்)

எமது வாழ்வின் உயர்ந்த வழிகாட்டியாய்
அன்பின் ஓர் அரும் பெரும் உறைவிடமாய்
மக்கள் சமூகத்தில் சிறந்த கல்வியாளனுமாயிருந்து
எம்மையும் முன்னிலையில் உயர்த்தி மிளிரச்செய்து
எம்மைப் பிரிந்து சென்று ஒரு மாதமாகியது தந்தையே!
உங்கள் வழிகாட்டலும் சிறந்த முன்மாதிரியும்
எம்மோடு களிப்புற்றிருந்த பழைய நினைவுகளும்
எம் மனதில் எப்போதும் உறுதியாயிருக்கும்
நீங்கள் சென்ற பாதையில் பின்தொடரும்
பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய மனதார எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தபாற்கந்தோரடி
காரைநகர்.

குடும்பத்தினர்.

## வீடு, வாடகைக்கு தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் மாதாந்த வாடகை அடிப்படையில் வீடு வாடகைக்கு தேவை. வைமன் வீதி, நாவலர் வீதி, செட்டிதெரு, கோயில் வீதி மற்றும் நல்லூர் ஆலய சூழலில் அரச உத்தியோகத்தில் பணிபுரியும் 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குதேவை.

**077 737 4818, 077 615 1369**

## தவறவிடப்பட்டுள்ளது

இணுவில் கந்தசுவாமி கோயில் வாசலில் (K.K.S வீதியில்) 13.01.2021 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அம்பிகை கலைமாடத்துக்கு முன்பாக பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது.
(Tax, Insurance, Driving License)
இதனைக் கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 034 3535, 021 225 5366**

**தவறிவிட்டது** நல்லூர் செட்டித்தெருவுக்கும், குறுக்கு வீதிக்கும் இடையில் எனது சங்கிலி (உருத் திராட்சத்துடன்) 15.01.2021 அன்று தவறவி டப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசிக்கு அழைக்கவும் (தகுந்த சன்மானம் வழங்கப்படும்) தொலைபேசி:-077 917 2696

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையமொன்றிற்கு கீழ்வரும் வேலைகளிற்கு பெண் வேலையாள்கள் தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
1. Computer Billing 2. Accounts

**077 419 5015**

# ஒரே குடும்பத்தில் நால்வருக்குத் தொற்று!

திருகோணமலை, ஜன.16

திருகோணமலை, உப்புவெளிப் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பாலையூற்று பூம்புகார் கிழக்குப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மற்றும் அந்தக் குடும்பம் வசிக்கும் ஒரே வளவுக்குள் இருக்கும் பெண் ஒருவர் உட்பட ஐவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொரோனா அறிகுறிகளுடன் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் சென்ற இரு சகோதரர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து ஈச்சிலம்பற்று, குச்சவெளி கொரோனா மத்திய நிலையத்துக்கு இவர்கள் அனுப்பப்பட்டனர். (ற-40)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 16 . 11 . 1955

விண்ணில் 17 . 12 . 2020

**அமரர் பாக்கியநாதன் அன்ரனி ஐயா** (நேசராசா)
(ஓய்வு நிலை தபால் ஊழியர்)

கடந்த 17-12-2020 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பாக்கியநாதன் அன்ரனி ஐயா (நேசராசா) அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும், மதியபோசன நிகழ்வும் இன்று (16-01-2021) சனிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.30மணியளவில் இடம்பெற உள்ளது. அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளு மாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அன்னாரது அமரத்துவ செய்தியறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறி எங்கள் துயரில் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் புலம்பெயர் தேசங்களிலிருந்து தொலைபேசி வாயிலாக துயர் பகிர்ந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி.

குடும்பத்தினர்.
077 531 4511

## 55 ஆம் நாள் நன்றி ஆராதனை அழைப்பு



**தர்மகுலராசா மாருதி** (அஸ்னா)

தாயின் மடியில் 10.02.1999

ஆண்டவரின் மடியில் 21.11.2020

அடியே அழகே
எங்கள் பேரழகியே
அழகூரில் பூத்த எங்கள்
- குடும்பத்தின் மகாராணியே



உன் தாயின் கனத்த நெஞ்சமோ
உன் கதைப்பில் கரையுமம்மா
உன் தந்தையின் குமுறலோ
உன் கண்சிமிட்டலில் மயங்குமம்மா
உன் தம்பிமாரின் சேட்டைகளோ
உன் பார்வையில் மறையுமம்மா

அம்மம்மா ஐயாவின் கைப்பிள்ளையும் நீயம்மா
கை விரிச்சு ஏங்கிறாங்கள் வாம்மா
உன் அப்பம்மாவின் மழலை பேச்சும் அத்தைமாரின் செல்லமொழியும்
- உனக்கு கேக்கலையோம்மா

உறங்கிடும் வீணையை மென்மையாய் தழுவி
மீட்டிடும் விரல்களால் தொட்டுணருகின்றது
உன் தயா பெரியம்மா குடும்பம்

காணாத கண்ணிற்கு கரைந்து போன கற்பூரமே
வீதா பெரியம்மாவின் கூக்குரல் கேக்குதா

தோழி அவளாம் உன் அன்ரியாம் பாசத்தின் பசுமையாம்
சூரி அன்ரியின் கதறல் கேக்குதம்மா

உன் கனவோ அக்கா பிள்ளைகள் உன்மடி சாய்வது
ஆனால் எம் கனவோ நீ எம்மடி உதிப்பது மாரு

காதலின் சிகரம் நீயம்மா
ஆனால் உன் காதல் உனக்கு முற்றுப்புள்ளி வைத்தது ஏனம்மா?

மட்டுவில் கிழக்கு,
சேச் றோட், சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
076 862 9564, 076 885 7688

## விற்பனை பிரதிநிதி தேவை

மென்பான உற்பத்தி நிலையத்திற்கு விற்பனை பிரதிநிதி தேவை. முன் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**077 780 8954, 021 221 3788**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரிலுள்ள சிறிய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

**077 262 6944**

## ஆட்டோ விற்பனைக்கு

201 -/ 206 - இலக்கமுடைய முழுவதுமாக திருத்தி வடிவமைக்கப்பட்ட இரண்டு ஆட்டோ விற்பனைக்குண்டு.

**077 898 9691 யாழ்ப்பாணம்**

## எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின்

# பத்தொன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



**மணங்கும்பானின் மைந்தன்**

**அமரர் ஐயம்பிள்ளை நடராசா**
**[மைதில் நகைமாட ஸ்தாபகர்]**

திதி: 16.01.2021 (தை மாத வளர்பிறை சதுர்த்தி)

விநாயகர் அருளால் அவதரித்து
எம்மை அரவணைத்து வழிகாட்டிய
நீங்கள் இறைவனடி சென்று
ஆண்டுகள் பத்தொன்பது ஆனதப்பா!
ஆண்டுகள் பல சென்றாலும்
நினைவுகள் எம் மனதில்
நிழலாக நிற்கின்றன.

ஆயிரம் சொந்தங்கள் அருகினில்
இருந்தாலும் உங்களைப் போல்
அவனியில் யார் வருவார் அப்பா?
நீங்கா நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

மலர்வு 14.04.1947

உதிர்வு 17.01.2002

மைதிலி நகைமாடம்,
(தனியார் நிறுவனம்)
89 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7902

யாழ். மைதிலி ஜுவலர்ஸ்,
79 Z, செட்டியார் தெரு.
கொழும்பு.
தொ.பே.: 011 239 6239


## காலநீடிப்பு
### படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2021

யாழ் மாநகர சபையில் படவரைஞர்களாகப் பதிவு செய்பவர்கள், பதிவுகளை புதுப்பிப்பவர்கள் எதிர்வரும் 22.01.2021 வரை தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை அறியத் தருகின்றேன்.

**குறிப்பு:** மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளை மேற்கொள்ளவும் புதுப்பிக்கவும் தவறுபவர்கள் அதன்பின் பதிவுகளை மேற்கொள்ள முடியாது.

முதல்வர்,
யாழ். மாநகரசபை.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### சின்னத்துரை குமரவேல்

தோற்றம் 01 . 12 . 1945 — மறைவு 13 . 01 . 2021

சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும், யாழ் மா.வி. நு.கூ.ச.சமாசத்தின் முன்னாள் தலைவரும், யா.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் முன்னாள் தலைவரும், யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் முன்னாள் தலைவரும், முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினருமாகிய அமரர்.சின்னத்துரை குமரவேல் (சமாதான நீதவான்) அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அமரரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்,

ஓம் சாந்தி!!!

இல.12, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள்
பணியாளர்கள், கூட்டுறவாளர்கள்
யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை.

## வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவிலலும்

அமரர் சறோஜினி
### ஸ்ரீசோமசேகரம்

(ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர்
இலங்கை வங்கி -
இரண்டாம் கிளை)

மண்ணில் 19.04.1947 — விண்ணில் 15.12.2020




அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (16.01.2021) சனிக்கிழமை நடைபெறுகின்றது அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் இருந்து தொலைபேசி மூலமாகவும், பதாகைகள், மலர்வளையங்கள் மூலமாகவும் இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தற்போது நிலவும் கொரோனா தொற்றுக் காரணமாக அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்திய நிகழ்விற்கு அழைக்கமுடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

323/8, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 12 . 1948 — மறைவு 11 . 01 . 2021

### இராசலக்ஷ்மி சிவயோகநாதன்

யாழ். கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலக்ஷ்மி சிவயோகநாதன் 11.01.2021 திங்கட்கிழமை கனடா ஒட்டாவா நகரில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் அருணசாலம் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவயோகநாதன் அவர்களின் ஆருயிர் மனைவியும், கலைமகள் வாணி, கலாதரன் ஆகியோரின் அன்புத் தாயும், அருட்செல்வனின் அன்பு மாமியும், காலஞ்சென்ற காராளசிங்கத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மனோராம்பிகை, சின்னம்மா (சாந்தம்) மற்றும் தங்கமுத்து, காலஞ்சென்ற காசிப்பிள்ளை, செல்லம்மா, சிவபாக்கியம், சிவனேஸ்வரி, சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அர்ஜுன், லக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் 17.01.2021 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்னாரின் அஞ்சலி நிகழ்வு அவரது இல்லத்தில் கைதடி வடக்கு 17.01.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
077 356 2936

## கண்ணீர்க் காணிக்கை



### S.R.கந்தசாமி

பிறப்பு 04 . 08 . 1946 — இறப்பு 15 . 01 . 2021

என் தெய்வத்துக்கு
கண்ணீர்க் காணிக்கை...

நியூஸ் பேப்பர் ஏஜன்ட்
ப.ஜெயக்குமார்.

## NOTICE
### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS) WORLD BANK FUNDED ACCELERATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION

**POST OF RESEARCH ASSISTANT CUM PROJECT ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 01**

**POST OF RESEARCH ASSISTANTS (FULL TIME) – ON CONTRACT BASIS – 02**

**DEVELOPMENT ORIENTED RESEARCH (DOR) PROJECT – FACULTY OF GRADUATE STUDIES**

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned post under OTS – AHEAD Operation from suitably qualified persons up to 29.01.2021

The Post carries all inclusive monthly salary of Rs.47, 800/= in addition applicable EPF & ETF will be paid.

Applicants are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for further details.

Registrar

## மரண அறிவித்தல்
### கணேசையர் பரராஜசேகரகுருக்கள்



சாவகச்சேரி வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசையர் பரராஜசேகரகுருக்கள் நேற்று (15.01.2021) வெள்ளிக்கிழமை 7 மணியளவில் காலமாகி விட்டார்.

அன்னார் சாரதாம்பாள் (பவுண்) அம்மாவின் அன்புக் கணவரும், செந்தூர சர்மா (மலேசியா) யாழினி (கொழும்பு) துசிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசங்கரி கிருபாகரசர்மா, தயாரஞ்சன் ஆகியோரின் மாமனாரும், ஜெயசுதசர்மா, ஜானகி செந்துஜசர்மா சிந்துஜசர்மா பானுஜசர்மா நர்மதா ரக்ஷிதா ரக்ஷனா ரிஷிகா ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2021) சனிக்கிழமை பகல் 12 மணியளவில் நடைபெற்று, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

தகவல்:
ப.செந்தூரசர்மா

## மரண அறிவித்தல்



பிறப்பு 28 . 02 . 1947 — இறப்பு 13 . 01 . 2021

### சின்னத்துரை சிவானந்தம்

**(சுபாஜினி ரேடர்ஸ், முருகன்கோவில் - அருகாமை, கண்டி வீதி, கிளிநொச்சி)**

கொல்லங்கலட்டி, மடத்தடியைப் பிறப்பிடமாகவும், விளாத்தியடி உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவானந்தம் கடந்த (13.01.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர், கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம், யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலை) அவர்களின் அன்புக் கணவரும், ரஜீவ், கிருபாலினி (ஆசிரியர், யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்), ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அமரர்களான விநாயகமூர்த்தி, சிவசுப்பிரமணியம் மற்றும் யோகமலர் (உரும்பிராய்), புனிதமலர் (இளவாலை), தவமலர் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.01.2021 வியாழக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் (விளாத்தியடி- உரும்பிராய் மேற்கு) நடைபெற்று, பின்னர் கீரிமலை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**மனைவி: ராஜேஸ்வரி - 077 084 2512**
**மகள்: கிருபாலினி - 076 621 7043**

தகவல்:
குடும்பத்தினர்.

ஈரான் நேற்று அதிரடி
## நடுக்கடலில் வைத்து ஏவுகணைச் சோதனை



தெஹ்ரோன், ஜன. 16
அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டு அச்சுறுத்தல்கள் அதிகமாகியுள்ள நிலையில் நடுக்கடலில் வைத்து ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது ஈரான். அத்துடன் கடற்படையின் பயிற்சிகளையும் துரிதமாக முன்னெடுத்துள்ளது.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கடந்த இரண்டு வருடங்களாக உச்சக்கட்ட பதற்றம் நிலவி வருகின்றது. கடந்த வருடம் ஜனவரி மாதம் ஈரானின் போர்த் தந்திரி சுலைமானியை ஆளில்லா விமானத் தாக்குதலில் கொன்றது அமெரிக்கா.

இதையடுத்து எப்போதுவேண்டுமானாலும் இரு நாடுகளுக்கும் இடையில் போர் வெடிக்கலாம் என்ற நிலையே தற்போதுள்ளது. அத்துடன் ஈரானுக்கு எதிரான அமெரிக்க நடவடிக்கைகளுக்கு மத்திய கிழக்கில் இஸ்ரேல் பெரும் ஆதரவு வழங்குகின்றது. இவ்வாறாக இஸ்ரேலும் அமெரிக்காவும் தனக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியதை அடுத்து ஈரானும் பதிலடி கொடுப்பதற்காகப் பல வழிகளிலும் தயாராகி வருகின்றது.

அண்மையில் அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்காக யுரேனியம் செறிவூட்டலை அதிகப்படுத்தியுள்ள ஈரான் தற்போது கடலில் தீவிர போர்ப் பயிற்சிகளிலும் இறங்கியுள்ளது. இதன்படி நேற்றையதினமும் தீவிர போர்ப்பயிற்சிகளையும் ஏவுகணைச் சோதனைகளையும் மேற் கொண்டுள்ளது. (ம)

## இலங்கைக்கு...

ளில் கறுப்புக் கொடி ஏற்றி கச்சதீவு நோக்கிச் சென்று போராட்டம் நடத்தவுள்ளோம் என்று இராமேஸ்வரம் மீனவ சங்கம் அறிவித்துள்ளது.

'இலங்கை கடற்படையால் சிறைப் பிடிக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட பல இலட்ச ரூபா பெறுமதியான படகுகளை உடனடியாக விடுவிக்கக் கோரியும், 1976ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கச்சத்தீவு ஒப்பந்தத்தின்படி கச்சதீவு பகுதியில் தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை உண்டு என்பதை வலியுறுத்தியும் அதையும் மீறி அந்தப் பகுதிகளில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்வதைக் கண்டித்தும் பாரம்பரிய இடத்தில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமையை மீட்டுத்தர வலியுறுத்தியும் எதிர்வரும் 23ஆம் திகதி இராமேஸ்வரத்தில் உள்ள படகுகள் அனைத்திலும் கறுப்புக் கொடிகளை கட்டி கச்சதீவு நோக்கி பயணித்து போராட்டம் நடத்தவுள்ளோம் என்று இராமேஸ்வரம் மீனவர் சங்கத்தில் நேற்றுமுன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ஒ-இ)

## கால அவகாசம்...

பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்கக் கூடாது. அந்தத் தீர்மானமானது இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் அல்லது விசேடமாக நிறுவப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்தின் முன் கொண்டு சென்று நிறுத்த உதவ வேண்டும் என்று வடக்கு ,கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறவுள்ள இலங்கை தொடர்பான தீர்மானம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் இணைத் தலைமை நாடுகளுக்கும் அனுப்பிய கடிதத்தில் அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பும் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பில் சங்கத் தலைவி கலாரஞ்சினி தெரிவித்ததாவது:

எந்தவொரு புதிய தீர்மானங்களும், பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்கக் கூடாது. அந்தத் தீர்மானமானது இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் அல்லது விசேடமாக நிறுவப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்தின் முன் கொண்டு சென்று நிறுத்த உதவ வேண்டும். இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதானது அதனை தண்டனையிலிருந்து தப்பிக்க வழிசெய்வதுடன், இலங்கை அரசின் கொடுமையான சட்டங்களாலும் தமிழர் தாயகப் பிரதேசங்களில் நிலை கொண்டுள்ள இலங்கை இராணுவப் பிரசன்னத்தாலும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும் இது வழி சமைக்கும்.

இலங்கையில் நீண்ட காலமாக புரையோடிக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றுக்காக சர்வதேசத்தால் ஒழுங்கமைக்கப்படுவதும், கண்காணிக்கப்படுவதுமான ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் மீளவும் நடைபெறாதிருக்க உறுதிப்படுத்த வேண்டும். நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றில்லாமையால் தமிழ் மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் 50 ஆண்டுகளுக்கு மேலாகக் குறிப்பாக 1958, 1977, 1983, 2009ஆம் ஆண்டுகளில் திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்படுவதற்கு முக்கிய பங்களிப்பு செய்துள்ளது.

போரில் கணவர்களை இழந்த 90 ஆயிரம் தமிழ் பெண்களின் நிலை தொடர்பாக, குழந்தைகள் உட்பட காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிதல் தொடர்பான நிலைப்பாடுகள், தமிழ் அரசியல் கைதிகளின் நிலை, பல்வேறு வகையான நில அபகரிப்பு, இராணுவ பிரசன்னம் மற்றும் சர்வதேச குற்றங்கள் தொடர்பான பொறுப்பு கூறுதல் சம்பந்தமான நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்திலிருந்து ஒவ்வொரு ஆறு மாதத்துக்கு ஒரு முறை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(ஒ-6)

## பாடசாலை...

யிடப்பட்டுள்ளன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 178, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 166, திருகோணமலை சிறிகோணேஸ்வரா இந்துக் கல்லூரி 159, மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி 160.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 174, மட்டக்களப்பு வின்ஸ்சன்ட் பெண்கள் உயர்தரப் பாடசாலை 169, திருகோணமலை சிறிசண்முகா இந்து மகளிர் கல்லூரி 160, யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை 173, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி 170.

நெல்லியடி மத்திய கல்லூரி 163, கொக்குவில் இந்துக் கல்லூரி 167, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 165. (எ)

## கொரோனா...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேல் மாகாணம் மற்றும் அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து வடக்கு மாகாணத்துக்கு வருவோர் இதுவரை சுயதனிமைப்படு த்தப்பட்டனர். அவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டு 14 நாள்களின் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வந்தது. அவ்வாறு வந்தவர்களில் பலர் கொரோனா தொற்றுடன் இருந்தமை பரிசோதனைகளில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டுவந்த இவ்வாறான துரிதமான செயற்பாடுகளால், வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. சுகாதாரப் பிரிவினரின் துரிதமான இந்த நடவடிக்கைக்கு மக்கள் வரவேற்பும் கிடைத்திருந்தது.

இந்தநிலையில், இந்த நடைமுறையை இடைநிறுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு நேற்றுப் பணிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் அதிகம் உள்ளது என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வருவோரை 14 நாள்களுக்குச் சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் அவசியமில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளரால் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவசர அவசியம் ஏற்பட்டால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விண்ணப்பித்து அவரது அனுமதியுடனே கொரோனா அபாய வலயங்களில் இருந்து, கொரோனா அபாயம் குறைந்த பகுதிகளுக்கு வரும் நபர்களைச் சுயதனிமைப்படுத்த முடியும் என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதேநேரம் நிறுவனங்களை மூடுதல், மாவட்டங்களுக்கு இடையே பிரயாணம் செய்வோரைத் தனிமைப்படுத்தல் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதித்தல் போன்ற நடவடிக்கைகளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது நடைமுறைப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பரவுவதற்கான வாய்ப்பு இருக்குமானால் அந்தப் பகுதியைச் சுகாதார மருத்துவ அதிகாரி தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள், சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைக் கருத்தில் கொண்டு, பயணக் கட்டுப்பாடு அல்லது நிறுவனங்களை மூடுவதற்கு உண்மையான தேவை இருக்கும்போது, அதைப் பிராந்திய தொற்றுநோயியலாளர் மற்றும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு அத்தகைய கோரிக்கைக்குப் பொருத்தமான தரவுகளுடன் மற்றும் தர்க்கங்களுடன் அறிவித்தல் வேண்டும் என்றும் அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில நிறுவனங்கள் விஞ்ஞான ரீதியாகப் பொருத்தமற்ற முறையில் மூடப்பட்டமை, சில பிரதேசங்களில பயணக்கட்டுப்பாடுகள் தன்னிச்சையான முறையில் விதிக்கப்பட்டமை போன்ற விடயங்கள் பலரால் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அந்தச் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொரோனா உச்சம் பெற்றுள்ள சமயத்தில் சுகாதாரக் கட்டுப்பாடுகளில் இவ்வாறு தளர்வுநிலை கொண்டு வரப்பட்டால் அது இன்னும் கொரோனா பரவ ஏதுவாகிவிடுமோ என்ற அச்சம் மக்களிடையே எழுந்துள்ளது. (எ-26)

## திருமண...

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

அதேநேரம், வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் திருமண நிகழ்வுகளை 150 பேருடன் வைபவங்களை நடத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (எ-20,26)

## வடக்கில்...

துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரைச் சேர்ந்த 4 பேருக்கே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தொற்று அறிகுறிகளுடன் இவர்கள் மன்னார் பொது மருத்துவமனைக்கு வந்திருந்தனர் என்றும், அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் 398 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அவர்களில் 4 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## கொரோனா....

கொழும்பு 10 ஐச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவரும், கொழும்பு 15 ஐச் சேர்ந்த 75 வயது ஆண் ஒருவரும், நாவலப்பிட்டியைச் சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவரும், கிரிபத்கொடவைச் சேர்ந்த 90 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடன் சேர்த்து நாட்டில் இதுவரை 255 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## புதுக்குடியிருப்பு...

பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு நேற்று நடைபெற்றது. இந்த அமர்வில், கண்டனத் தீர்மான வரைபை சபை உறுப்பினர் மு.முகுந்தகஜன் மற்றும் இ.சத்தியசீலன் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்தனர். இந்தத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மான வரைபைச் சமர்ப்பித்து இ.சத்தியசீலன் தெரிவித்ததாவது

பிரபாகரனின் புகைப்படத்தை பிரசுரித்தமைக்காக உதயன் பத்திரிகை மீது அரச தரப்பால் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. உதயன் பத்திரிகை 2009 முன்னர்கூட தமிழர் பகுதிகளில் இடம்பெறும் கொலை, கொள்ளை, அச்சுறுத்தல்களை வெளிக்கொணர்ந்த ஒரு ஊடகமாகும். இவ்வாறான பத்திரிகை நசுக்குவதற்கென்றே அரசு வழக்குத் தொடர்ந்துள்ளது.

அனைத்துப் பத்திரிகைகளிலும் போருக்குப் பின்னரான காலத்தில் பிரபாகரன் படம் வெளிவருகின்றபோதும், உதயன் பத்திரிகை மீது மட்டும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த விடயத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கடந்த காலங்களிலும் உதயன் பத்திரிகை நிறுவனம் தாக்கப்பட்டிருப்பதுடன், அதில் பணியாற்றியவர்கள் தாக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும் உள்ளனர். தமிழ் ஊடகங்கள் மீது அரச தரப்பு அடக்குமுறைகளைத் தொடர்ந்து பிரயோகிக்காமல் இருக்க சபை உறுப்பினர்கள் அனைவரும் இந்தக் கண்டனத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றார்.

இந்தத் தீர்மான வரைபைச் சமர்ப்பித்து மு.முகுந்தகஜன் தெரிவித்ததாவது

உதயன் பத்திரிகைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கென்பது, ஊடக அடக்குமுறைச் செயற்பாடாகும். பிரபாகரனுடைய புகைப்படத்தினை தென்னிலங்கை ஊடகங்கள் பலவும் வெளியிடுகின்றன. விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்த இந்தியாவில்கூட ஊடகங்களில் பிரபாகரனின் படம் வெளியிடப்படுகின்றது.

இப்படியிருக்க பிரபாகரனின் படத்தை பிரசுரித்தமைக்காக உதயன் பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தொடர்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது. உதயனுக்கு எதிராக அரச தரப்பால் வழக்குத் தொடரப்பட்டமைக்கு எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்றார்.

இந்த கண்டனத் தீர்மானத்துக்கு ஆதரவாக சபை உறுப்பினர் செல்லையா பிரேம்காந்தும் கருத்துத் தெரிவித்தார்.

கண்டனத் தீர்மான வரைவு அனைத்து சபை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதி, நீதி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (எ-246)

# 19ஆம் ஆண்டு நினைவலைகள்

**மண்கும்பானின் மைந்தன்**

அமரர்

## ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர்
நியூ மைதிலி ஜுவலர்ஸ், சந்தோஷ் ஜுவலர்ஸ்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14.04.1947 | 17.01.2002 |

திதி: 16.01.2021 (தை மாத வளர்பிறை சதுர்த்தி)






**அன்புள்ள அப்பா!**

நிஜமாக நீங்கள் மறைந்து
ஆண்டுகள் பத்தொன்பது ஆனதோ
நீங்கள் இல்லாமனை
பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக்கடந்தாலும் - உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப்பூஜிப்போம்




**அன்னாரின் நினைவையொட்டி
இன்று (16.01.2021) சனிக்கிழமை
இல 47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
வடக்கில் அமைந்துள்ள வலுவிழந்தோர்
புனர்வாழ்வு நிலையத்திற்கு உணவு
வழங்கப்படுகின்றது.**

நடராசா கஜந்தன்
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7878 / 021 221 7877

நடராசா கஜந்தன்
சந்தோஷ் ஜுவலர்ஸ்
இல. 97A,99V, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 1177 / 021 221 1188

என்றும் நினைவுடன் வாழும்:
குடும்பத்தினர்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.